www.padippakam.com

விலை ரூ. 3-00

# ஈழ சுதந்திரன்
ELASUTANTIRAN

திருவள்ளுவராண்டு
௨0௨௭
கார்த்திகை-மார்கழி

புத்தகம்: 10 இதழ்: 1

டிசம்பர்-1996



∴ தமிழ் மக்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்தது யார்?

∴ இந்தியாவுடன் செய்து கொண்ட உடன்பாடுகளையும் அலட்சியப்படுத்தி ஆட்டம் போடுவது யார்?

∴ தமிழினப் படுகொலைப் போரை சந்திரிகா அரசு சமாதானத்துக்கானது என்பதா?

## இந்தியாவை புறக்கணித்து இன்னொரு நாட்டு

# மத்தியஸ்தமா?

## சந்திரிகாவுக்கு சந்திரகாசன் கேள்வி

தமிழ் மக்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை எல்லாம் ஒருதலைப் பட்சமாகக் கிழித்தெறிந்தவர்கள் யார்? இந்தியாவுடன் செய்து கொண்ட உடன்பாடுகளையும் அலட்சியப்படுத்தி, தமிழ் மக்களை அகதிகளாக இந் தியாவுக்கு ஓடுமாறு செய்வது யார்? தமிழினத்தைப் படுகொலை செய்வதற் காகவே திட்டமிட்டுத் தொடர்ந்து நடத்திவரும் போரை சமாதனத்துக்காக என்று சொல்வது யாரை ஏமாற்ற? ஏற்கனவே மத்தியஸ்த முயற்சியில் ஈடு பட்டு, அதற்காகச் சொல்லொணா இழப்புகளைச் சந்தித்த இந்தியாவைப் புறக்கணித்து விட்டு, இன்னொரு வெளிநாட்டு மத்தியஸ்தத்தை ஏற்போம் என்று சந்திரிகா சொல்லுவதில் உள்ள சூட்சுமம் என்ன?

இவ்வாறு, ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத் தலைவர் சா. செ. சந்திர காசன் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்திருக்கும் அறிக்கை வருமாறு:

சிறீலங்காவின் குடியரசுத் சலைவர் சந்திரிகா குமார துங்க இலங்கை இனப் பிரச்சி னையில் வெளிநாட்டு மத்தி யஸ்தத்தை ஏற்றுக் கொள்ளத் தயார் என்று இப்போது அறி வித்திருக்கிறார்.

அதுவும் தற்போது சிங் கள ராணுவம் வடக்கு கிழக் கில் நடத்தி வரும் வலுச் சண் டையை நிறுத்தாமல்,

தமிழ்ப் பகுதிகளில் அத்தி யாவசியப் பொருள்களுக்குப் போடப்பட்டிருக்கும் தடை களை அகற்றாமல்,

சிங்களப் பகுதிகளில் மக் கள் நடமாட்டத்திற்கு எந்த விதத் தடைகளும் இல்லாம லிருக்கும் போது, தமிழ்ப் பகுதிகளில் மட்டும் பக்கத்துப் பக்கத்து ஊர்களுக்குக்கூட மக்கள் போய் வருவதற்கு 'பாஸ்' முறையை அமுல் படுத்தி, தமிழ் மக்களின் நட மாட்டத்திற்கு விதிக்கப் பட் டுள்ள கடுமையான கட்டுப் பாடுகளை நீக்காமல்,

தலைநகர் கொழும்பிலே கூட தமிழர்கள் என்றால் எந்த நேரமும் அடையாள அட்டையைக் காவித் திரிய வேண்டும் என்றிருக்கக் கூடிய அந்தரிப்பு நிலையை மாற்றா மல,

தமிழ் மக்கள் என்றால் நிலத்தில் இறங்கி வேளாண்மை செய்யவோ, கடலில் இறங்கி மீன் பிடிக் கவோ முடியாதென்றுள்ள நிலைமையைத் திருத்தாமலே,

சமரச முயற்சியில் வெளி நாட்டு மத்தியஸ்தத்தை வர வேற்கும் இந்த அறிவிப்பைச் செய்துள்ளார் சந்திரிகா.

### கிழித்தெறிந்தது யார்?

அதே நேரம் இந்தச் சம ரசத்திற்காக முன்பு எடுக்கப் பட்ட முயற்சிகளை சந்திரிகா வும், இவருக்கு முன்பிருந்த அரசுகளும் எவ்வளவு தூரம் கௌரவித்திருக்கின்றன என்ப தைக் கருதிப் பார்க்க வேண் டும்.

தந்தை செல்வா-பண்டார நாயகா ஒப்பந்தம்,

டட்லிசேனநாயகா-செல்வ நாயகம் ஒப்பந்தம்

ஆகியவை அவை எழுதிய மை உலர்வதற்கு முன்பாகவே சிங்களத் தரப்பினால் ஒரு தலைப்பட்சமாகக் கிழித் தெறி யப் பட்டன.

ஏனையத் தமிழர்கள் தலைவர்களுடன் சிங்கள ஆட் சித் தலைவர்கள் பேசிக்கண்ட முடிவுகளுக்கும் இந்தக் கதை தான் நேர்ந்தது.

அமைதி வழியில் இலங் கையில் தமிழினத்தின் உரிமை களை நிலை நாட்டத் தமிழர் தலைவர்கள் மேற்கொண்ட சர்வதேச முயற்சிகள் எல்லாம் தேசவிரோத நடவடிக்கைக ளாகச் சித்தரிக்கப்பட்டனவே யொழிய, நேசப்பாங்கோடு சிங்களத் தலைவர்களால் அணுகப்படவில்லை.

குறிப்பாக எமது ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் (ProTEG) மனிதவுரிமைகள் அடிப்படையிலும், ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இலங்கையிலும், இந்தியாவிலும். பன்னாட்டு அரங்கிலும் சட்டரீதியான பல்வேறு முயற்சிகளை மேற் கொண்டது. சிங்கள மக்க ளிடையே உள்ள அறிவு ஜீவி களின் ஒத்துழைப்பைக் கூட அதற்காக நாடியது.

### சிங்களப் பேரின வாதம்

ஆனால், சந்திரிகா சார்ந்து நிற்கும் சிங்களப் பேரினவாதம் அவற்றுக்குச் செவி சாய்க்காததுடன், அவற்றை முறியடிக்கத் தன் னாலான சதி வேலைகளைச் செய்ததுடன், தமிழ் அமைப்பு கள் சிலவற்றையும் அவற்றுக் கெதிராகத் தூண்டி விட்டு, எந்த அமைதி முயற்சியும் வெற்றியடையாமல் பார்த்துக் கொண்டது.

தமிழின அமைதி முயற்சி களை இப்படித் தகர்த்தெறிந்த சிங்கள ஆட்சி, தமிழினப் படு கொலையைத் திட்டமிட்டு நடத்தியது. 1958ல் தொடங் கிய அப்படுகொலை 1983 முதல் பூதாகர வடிவம் பெறு றது.

இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறித்து ருசி கண்ட சிங்களப் பேரினவாதம், ஈழத் தமிழ் மக் களின் பாரம்பரிய உரிமையை பறித்து விடத் துடித்தது. ''இலங்கைத் தீவு முழுவதும் சிங்களருக்குச் சொந்தம்; தமிழ் மக்கள் தமிழ் நாட்டுக்குப் போய் விட வேண்டியது தானே'' என்று தாங்களாகவே தங்களுக்குள் கற்பித்துக் கொண்ட ஒரு நியாயத்தின் அடிப்படையில் தமிழ் மக்களை யெல்லாம் இந்தியாவுக்குத் துரத்திவிடும் நோக்கோடு தான், இப்போது நடக்கும் முப்படைத் தாக்குதல்கள் உட்பட சிங்களத் தரப்பின் நடவடிக்கைகள் அமைந் திருக்கின்றன.

அதனால் இலங்கையில் எது நடந்தாலும் அதனுடைய

(2-ம் பக்கம் பார்க்க)

## நீதி கிட்டும் வரைத் தாங்கிடுவீர்!

**- தமிழீழதாசன் -**

அகதி அகதி அகதி வாழ்க்கை
அவதி அவதி அவதி
திகதி திகதி திகதி தோறும்
தேவை உதவி உதவி (அகதி

**அனுபல்லவி**

ஊரைப் பிரிந்து உறவைப் பிரிந்து
ஓடிவந்தோமே கொடுமையினால்
உயிரைப் பறித்து உடலைச் சிதைத்துக்
கேடு புரிந்திட்ட நிலைமையினால் (அகதி)

**சரணங்கள்**

நாடு நகரோடு நல்ல பெயரோடு
ஈடு இணையற்று வாழ்ந்திருந்தோம்
ஆட்டை நரிபோல அண்டைச் சிங்களர்
சேட்டை விட்டதால் தாழ்ந்து விட்டோம் (அகதி)

வீடு மனையோடு தோட்டம் துரவோடு
பீடு மிகக்கொண்டு மகிழ்ந்திருந்தோம்
ஆளும் கொழும்பாட்சி நாளும் வெறியோடு
சூளும் சதிகளால் நலிந்து விட்டோம் (அகதி)

கல்வி வளத்தோடு கலையின் சிறப்போடு
பல்வி தத்திலும் உயர்ந்திருந்தோம்
எல்லாம் தமக்கென்று பேரின வாதிகள்
தள்ளிவிட நொந்து இழிந்து விட்டோம் (அகதி)

மாந்தநேயமுடன் வாழ்ந்த எங்களைச்
சூழ்ந்த இடரகற்றி ஏந்திடுவீர்
நேர்ந்த கொடுமைகள் இனியும் நேராமல்
நீதி கிடைக்கும் வரைத் தாங்கிடுவீர் (அகதி)

**ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்**

படிப்பகம்

'சிறிய பகையெனினும் ஓம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபாடு உடையர்-நிறையகத்து
ஆழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது''

-நீதி நெறி விளக்கம்

(ஆழ்ந்த குளமாகிய நீர்நிறைந்த மடுவின்கண் தவளை குதித்தாலும், அச்சமயம் அம் மடுவில் காணப்பட்டு நின்ற யானையின் பெரிய நிழலையும் கூட காண முடியாமல் போய் விடும். அதுபோல ஒற்றுமையாக-அமைதியாகச் செய்ய வேண்டிய ஒன்றில் சிறிய வேறுபாடு தோன்றினும் அது பெரிய இடர்ப்பாட்டை, வெற்றி தவறிப் போதலைச் செய்து விடும்.)

# தெளிவு

## ஈழத் தமிழர்க்கே ஆதரவு தேவை! தனியொரு இயக்கத்திற்கல்ல!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ் நாட்டின் ஆதரவு ஒட்டுமொத்த இலங்கைத் தமிழர் விடிவுக்காகவே என்றிருந்தவரை இந்தியாவிலோ, உலகத்திலோ வெறுப்புத் தோன்றவில்லை; விரோத நோக்கோடு பார்க்கப்படவில்லை.

ஏனென்றால் அது மொழியாலும், இனத்தாலும், பண்பாட்டாலும் ஒத்த உணர்ச்சியுள்ள ஒரு மக்களினத்தின் மனிதாபிமான ஆதரவு என்றே மதிக்கப்பட்டது. இயல்பாக எழும் இரத்தபாசம் என்று போற்றவும் பட்டது.

ஆனால் அதுவே இயக்கவாரியாக முத்திரை குத்தப்பட்டு, தத்தமக்குப் பிடித்த இயக்கத்திற்கே ஆதரவு என்றும், பிடிக்காத இயக்கத்திற்கு எதிர்ப்பு என்றும், இலங்கையிலிருந்த வேற்றுமைகள் இங்கும் அரங்கேற்றப்பட்ட போது பிணக்கையும் பேதத்தையும் வளர்த்து, எரிச்சலைத்தான் தோற்றுவித்தது.

விளைவு ?

அதனுடைய ஆதரவு, எதிர்ப்பு என்பதில் உள்ளூர் அரசியலும் தலையிட்டு, 'வெளிநாட்டு வம்பு இங்கு ஏன்?' என்று வெறுத் தொதுக்குகிற அல்லது ஒதுங்குகிற அளவுக்கு நிலைமை விபரீதமாகப் போய் விட்டது.

அதன் உச்சம் கடந்த ஐந்தாண்டுகளாக ஈழத் தமிழரைப் பற்றி இந்தியாவில் கதைக்கவே முடியாது; கூடாது; ஆகாது என்கிற அளவுக்கு மோசமான சூழ்நிலை ஏற்பட்டதாகும்.

நல்ல வேளையாக தற்போது அந்த இருண்ட சூழ்நிலை மாறி வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் நாட்டில் ஈழத் தமிழருக்கான ஆதரவுக் குரல்கள் அனைத்தும் ''ஈழத்தில் இனக் கொலை நிற்க வேண்டும். ஈழத் தமிழினம் காப்பாற்றப்பட வேண்டும்' என்கிற ஒரே தொனியில் ஒலிக்குமானால் மீண்டும் இந்திய அரசின் ஆதரவைப் பெறவும், அதன் மூலம் உலக ஆதரவைத் திரட்டவும் எளிதில் முடியும்.

ஆனால், இன்று தமிழ்நாட்டில் மீண்டும் தனி இயக்க ஆதரவுக் குரல்கள் தோன்றியுள்ளது ஈழத் தமிழினத்திற்கான ஒட்டுமொத்த ஆதரவில் ஊனத்தை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தி.மு.க. வுக்கு எதிராகவும், ஆதரவாகவும் கூட இந்தப் பிரச்சினை பயன்படுத்திக் கொள்ளப்படுவதைப் பார்க்க வியப்பாக இருக்கிறது.

இது போன்ற பிரச்சினைகளில் கட்சியரசியற் பார்வை கூடாது என்கிற கலைஞரின் வேண்டுகோள் ஏற்கத் தக்கதாகும். ஈழத் தமிழருக்குத் தமிழ்நாட்டில் கட்சி கடந்த ஆதரவு தோன்றுமானால்தான் இந்தியாவிலும் அத்தகைய ஆதரவைத் தோற்றுவிக்க முடியும். இந்தியாவில் அத்தகைய ஆதரவு தோன்றிவிட்டால், அப்புறம் ஒட்டு மொத்த உலக ஆதரவு தேடி வரும் என்பதில் ஐயமில்லை.

இது போன்ற ஒரு சூழ்நிலையில்தான் கிழக்கு வங்க மக்களுக்கு விடிவு கிட்டியது என்பதைக் கருதிப் பார்த்தும், அதற்கு மேற்கு வங்க மக்களின் ஒட்டு மொத்த ஆதரவுதான் வழி கோலியது என்பதை மனதிற் கொண்டும் தமிழகத்து ஈழத் தமிழர் ஆதரவாளர்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

# மத்தியஸ்தமா?...

(முதல் பக்க தொடர்ச்சி)

நேரடிப் பாதிப்பு இந்தியாவுக்குத்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

### தலையிடாக் கொள்கை

அப்படியிருக்க, ஒரே ஒரு போராளிக்குழு (LTTE) வின் பொருட்டு இந்தியா இது விடயத்தில் பாராமுகமாக இருப்பது சரியல்ல. அந்தக் குழுவின் செயல்பாட்டில் கூட இப்போது ஒரு மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இந்தியாவைக் கொண்டுதான் சிங்கள ஏகாதிபத்தியத்தை வழிக்குக் கொண்டு வர முடியும் என்கிற கண்கூடான உண்மையை அவர்களும் இப்போது உணரத் தொடங்கியிருப்பதால், இந்தியாவை மீண்டும் இத்திசையில் செயல்படச் செய்ய அவர்களும் தற்போது பல்வேறு முனைகளில் முயற்சி மேற்கொண்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை 1983க்கு முன்பு ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிடாக் கொள்கையைத் தான் மேற்கொண்டு வந்திருக்கிறது.

நேரு-கொத்தலாவல ஒப்பந்தம்,

லால்பகதூர் - சிறிமாவோ ஒப்பந்தம்,

இந்திராகாந்தி -சிறிமாவோ ஒப்பந்தம்

போன்றவையெல்லாம் ஐரோப்பியர் காலத்தில் இந்தியாவிலிருந்து சென்ற இந்திய வம்சாவளியினர் மற்றும் கச்சத்தீவு முதலியவை பற்றியதாகவே அமைந்திருந்தன.

### இந்தியாவில் திருப்பம்

1983ல் நடந்த வரலாறு காணாத் தமிழினப் படுகொலையைத் தொடர்ந்து, ஈழத்தமிழ் மக்களும் இந்தியாவுக்கு அகதிகளாக வரத் தொடங்கிய பிறகே இந்தியா இதில் நேரடியாகத் தலைப்பட்டது.

அன்னை இந்திராகாந்தி
அமரர் ராஜீவ்காந்தி
ஐ. கே குஜ்ரால்

போன்றவர்கள் எல்லாம் ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிச் சிங்கள ஆட்சியாருடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார்கள். தமிழகத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய கொந்தளிப்பையடுத்து, முதலில் உணவுப் பொருட்களையும், பிறகு அமைதிப் படையையும் இந்தியா தமிழ் மக்களைக் காக்கும் பொருட்டு அனுப்பி வைத்தது.

ராஜீவ்காந்தி - ஜெயவர்த்தன இடையே கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கை ஒரு முற்போக்கான பாதையை வகுத்துக் கொடுத்தது.

ஆனால், அதன்மேற்சென்று சரியான தீர்வை உருவாக்குவதற்குப் பதில் சிங்கள ஆட்சியினர் அதனை நீர்த்துப் போகச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து, மீண்டும் இனப் பிரச்சினையை முன்னிருந்த இடத்திற்கே கொண்டு வந்து விட்டனர்.

இருப்பினும் இதில் சில தமிழ் அமைப்புகள் விட்ட தவறினையிட்டு, சிறீலங்காவின் மீது திரும்பியிருக்க வேண்டிய இந்தியாவின் கோபம் திசை திரும்பி, தமிழினத்திற்கு வரவிருந்த நன்மை தவறிப்போய் விட்டது.

### இருண்ட சூழ்நிலை

நம்மைப் பொறுத்தவரை 1987ன் போதே அத்தீர்வு சரிவராவிட்டால் மாற்றுத் திட்டமாகத் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை இந்தியா உருவாக்கி, இப்பிரச்சினை நீண்டுகொண்டே செல்லாமல் இதற்கொரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அப்போதே வலியுறுத்தியிருந்தோம்.

ஆனால் இடையில் நிகழ்ந்து விட்ட ராஜீவ்காந்தி படுகொலை தமிழர்க்கான அனுதாபத்தை, ஆதரவுநிலையைச் சீர்குலைத்து விட்டதால் இந்தியாவில் இப்பிரச்சினையில் ஒரு இருண்ட சூழ்நிலை ஏற்பட்டு எதிர்பார்க்காதவையெல்லாம் நடந்து விட்டன.

ஆயினும் அண்மையில் நடந்த அரசியல் மாற்றங்களால் தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் காற்று சற்று மாறி வீசத் தொடங்கியிருப்பதால், சந்திரிகாவின் போக்கிலும் மாறுதல் ஏற்பட்டு, இதுவரை ''மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை'' - என்று சொல்லி வந்தவரை இப்போது அத்தகைய மத்தியஸ்தத்தை ஏற்கத் தயார் என்று சொல்ல வைத்திருக்கிறது.

### மாற்றத்தின் காரணம்

ஆம்; பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தும், இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து வர இந்தியா தன் அயலுறவுத் துணைச்செயலாளரை அனுப்பி நடவடிக்கை எடுத்துள்ளதும் சந்திரிகாவிடம் அந்த மாற்றத்தைத் தோற்றுவித்துள்ளது.

அதேவேளை இலங்கையில் தமிழனே இல்லாமல் செய்கின்ற நடவடிக்கையிலும் சந்திரிகா அரசு தீவிரமாகஇறங்கியுள்ளது. ஒன்று தமிழ் மக்கள் முப்படைத் தாக்குதல்களில் சிக்கி அழிய வேண்டும் அல்லது அகதிகளாக வெளியேற வேண்டும் என்கிற நிலை முடுக்கி விடப்பட்டுள்ளது.

இந்நிலை ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காகவும் இலங்கையில் இந்தியா தலையிட்டாக வேண்டிய கட்டாயத்தைமீண்டும் ஏற்படுத்தியுள்ளது.

அப்படி இந்தியா தலையிடும்போது இலங்கையில் தமிழ் மக்கள் தங்கள் தனித் தன்மையைப் பாதுகாத்துக் கொண்டு, தன்மானத்தோடு வாழ்வதற்கு ஒரு பிரதேசம்-பாரம்பரியத் தாயகப் பகுதி தேவை என்பது மறுக்க வொண்ணாத அடிப்படையாகும். அந்த அடிப்படையில் தான் முன்பும் இந்தியா தமிழ் மக்களை ஒத்துப் போகும்படி செய்தது. ஆனால் சிறீலங்கா தான் அதைக் குழப்பிக் குட்டிச் சுவராக்கி விட்டது. அப்போது இந்தியா ஏற்படுத்திய தீர்வு சரிவராது என்றும் நிலை நாட்டி விட்டது.

### தனி ஈழந் தீர்வு

அப்படி மீண்டும் இந்தியா தலையிடும்போதும் சிறீலங்கா குழப்ப முனைந்தால் (அந்தக் குழப்பத்தின் தொடக்கம் தான் இந்தியாவின் மத்தியஸ்தம் இருக்கத்தக்கதாக வேறொரு அயல்நாட்டின் மத்தியஸ்தத்தை ஏற்கத் தயார் என்ற சந்திரிகாவின் அறிவிப்பாகும்) தனி ஈழம் ஒன்று தான் சரியான தீர்வு என்பதை ஏற்று இந்தியா அதற்கு வழி செய்ய முன் வர வேண்டும்.

இத்தகைய தீர்வைத்தான் சைப்ரஸ் தீவில் கிரேக்கர்கள் துருக்கியர்கள் பிரச்சினையில் துருக்கி நாடு கண்டது என்பதும் ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

### சமநிலை தருக

அதாவது சைப்ரஸை ஆளுபவர்களாகக் கிரேக்கரும் ஆளப்படுபவராக மட்டுமே துருக்கியரும் இருந்தவரை அங்கும் 23 ஆண்டுகளாக இனப் பிரச்சினை தீராமல் தான் இருந்து வந்தது. இரு இனத்தாருக்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் எல்லாம் தோல்வியையே சந்தித்து வந்தன. அதே நேரம் ஆளும் கிரேக்கர்களால் ஆளப்படும் துருக்கியர்கள் அழிக்கப்பட்டே வந்தனர்.

துருக்கி தலையிட்டு இரு இனத்தாரையும் சம நிலையில் வைத்த பிறகு சமாதானப் பேச்சு எப்படியிருந்தாலும், சைப்ரஸ் துருக்கியர்கள் அழிக்கப்படுவது நின்று விட்டது.

எனவே, அது போன்றதொரு தீர்வை, இலங்கையில் தமிழரையும் சிங்களவருக்குச் சம நிலையில் வைக்கும் நல்ல ஒரு தீர்வை, ஒரு இனம் ஆளும் இனமாகவும், மற்றது ஆளப்படும் இனமாகவும் இல்லாதவொரு தீர்வை இந்தியா ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு, ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத் தலைவர் திரு. சந்திரகாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

படிப்பகம்

### தமிழ்ப் பெண் கிருஷாந்திக்கு நேர்ந்த பரிதாபம்

# கற்பழிப்புக் கயவாளித்தனத்தை மறைக்க சிங்களப் படையினரின் 3 படுகொலைகள்

செப்டம்பர் ஏழாம் திகதி சனிக்கிழமை யாழ்குடா நாட்டில் அன்றும் ஒரு சாதாரண நாளாகவே விடிந்தது. அன்றாட கடமைகளைக் கவனிப்பதிலேயே அனைவரும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். கைதடியைச் சேர்ந்த கிருஷாந்தி கூட க.பொ.த. (உ/த) பரீட்சை எழுதுவதற்காகப் போய்க் கொண்டிருந்தாள். கல்வியை மட்டும் மூலதனமாக வைத்து வாழும் அவளுக்கு இப்பரீட்சைதான் எதிர்காலத்திற்கு விளக்கேற்றவுள்ளது. இவள் அப்படியொன்றும் 'மொக்கு' என்று சொல்லிவிட முடியாது க.பொ.த. (சா/த) பரீட்சையில் 7 'டி' ஒரு 'சி' பெறு பேறுகளைப் பெற்றிருந்தாள்.

யாழ்ப்பாண கச்சேரியில் சிரேஷ்ட அதிகாரியாக பணியாற்றிய கிருஷாந்தியின் தகப்பனார் குமாரசாமி புற்றுநோய் காரணமாக 1984இல் இறந்து விட்டார். தாயார் இராசம்மாவே தனது மூன்று பிள்ளைகளையும் தந்தைக்குத் தந்தையாக தாய்க்குத் தாயாக காத்து வந்தாள். மூத்த மகள் மேல் படிப்புக்காக சமீபத்தில் தான் கொழும்பு சென்றிருந்தார்.

கிருஷாந்திக்கு வயது 18 மாத்திரம்தான் பொது நிறமானாலும் அழகானவள். படிப்பில் ஆர்வமும் அதிகம். யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான சுண்டிக்குளி பெண்கள் கல்லூரியின் மாணவி.

**வலை விரிக்கும் வரை...**

சம்பவதினமான செப்டம்பர் ஏழாம் திகதி சனிக்கிழமை தனது பாடசாலையில் க.பொ.த. (உ/த) பரீட்சை எழுதிவிட்டு காலை 10.30 மணி போல தனது பாடசாலை தோழி ஒருவரின் மரண வீட்டுக்கு (இவர் அன்று காலை சுண்டிக்குளியில் இராணுவ வாகனம் ஒன்றில் மோதி இறந்தார்) சென்றார். அங்கு தோழியின் சடலம் வீடு வந்து சேர்ந்திருக்கவில்லை. சிறிது நேரம் அங்கு இருந்து விட்டு சனிக்கிழமை விரதம் நோற்கும் தனது தாயார் தனக்காக சாப்பிடாமல் காத்திருப்பார் என்பதற்காக வீட்டுக்கு கிளம்பினார் கிருஷாந்தி. ஆனால் காலன் பின்தொடர்வதை அவள் அப்போது அறிந்திருக்கவில்லை.

இவரது தாயார் இராசம்மா குமாரசாமி பிறந்தது மலேசியாவில். வயது 59. அடுத்த வருடம் பதவி ஓய்வை எதிர்பார்த்திருக்கும் இவர் கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் துணை அதிபர். கல்கத்தா பல்கலைக் கழகத்தின் ஆங்கில இலக்கிய சிறப்பு பட்டதாரியும் கூட. இவரது மகன் பிரணாபன் (16) க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை (வடபகுதிக்கான விசேட பரீட்சை) எழுதிவிட்டு முடிவுக்காக காத்திருந்தார்.

'தாமுண்டு தம் குடும்பமுண்டு' என்று வாழ்ந்திருந்த இவர்களுக்கு பாடசாலை சென்று வரும் மகள் கிருஷாந்தி மீது சில விஷக்கண்கள் குறி வைத்திருப்பதை அறிந்திருக்கவில்லை. குறி வைத்தவர்கள் வலைவிரிக்கும் வரை அவை பற்றி எந்த பிரக்ஞையுமே இல்லாமல்தான் அவர்கள் இருந்தனர். அதுவே அந்த குடும்பத்தின் படுகொலைக்கு காரணமாயிற்று.

**ஊர்த் தகவல்...**

தோழி வீட்டில் இருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தொலைவிலிருக்கும் கைதடியில் உள்ள தனது வீட்டுக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த அவரை யாழ்ப்பாண நுழைவாயில் முகப்புக்கு அருகில் உள்ள சோதனை முகாமில் இராணுவத்தினர் தடுத்து உள்ளே அழைத்துச் சென்றுள்ளனர். அந்த வேளையில் சோதனை முகாமை கடந்து சென்ற சில பொது மக்களும் இதனை அவதானித்துள்ளனர். இதற்கிடையே பகல் உணவுக்காக மகள் வீடு திரும்பாததால் எதிர்பார்ப்புடன் காத்திருந்த தாயாரிடம் மகள் இராணுவ சோதனை முகாமில் கைது செய்யப்பட்ட விபரத்தை தெரிவித்தனர். உடனே தனது மகன் பிரணாபனுடன் அவனது சைக்கிளில் குமாரசாமி இராசம்மா அயலவரான பல நோக்கு கூட்டுறவு சங்க ஊழியர் கிருபாமூர்த்தி சிதம்பரத்தையும் உதவிக்கு அழைத்துக் கொண்டு இராணுவ முகாமுக்கு சென்றார்.

பொலீஸ் வட்டாரங்களின் தகவலின்படி அவர்கள் இராணுவ சோதனை முகாமை சென்றடையு முன்னரே மூன்று பேர் கிருஷாந்தியை மேய்ந்திருந்தனர்.

முகாமையடைந்த தாயாரும், தம்பியும் கிருஷாந்தியை விடுதலை செய்யுமாறு இராணுவத்தினருடன் வாதாடியுள்ளனர். அவர்கள் தாம் கைது செய்யவில்லை என்று மறுத்துள்ளனர். ஆனால் ஊரவர் மூலம் ஊர்ஜிதமான தகவலைப் பெற்றிருந்த தாயார் அதனை வலியுறுத்தி வாதாடினார்.

**காட்டுமிராண்டித்தனமான கற்பழிப்பு**

தற்போது கற்பழிக்கப்பட்டு அறையொன்றில் அடைக்கப் பட்டிருந்த கிருஷாந்தியை வெளியில் விடுவிக்க முடியாத சூழ்நிலையில் இருந்த இராணுவத்தினர் அவரது தாயார், தம்பி மற்றும் கிருபாமூர்த்தி ஆகியோரை கயிற்றினால் கழுத்தில் இறுக்கி கொலை செய்தனர் என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் கிருஷாந்தி மீதான தமது அட்டூழியத்தை அவர்கள் நிறுத்திக்கொள்ள வில்லை. அதன் பின்னரும் மேலும் ஆறு பேரால் கிருஷாந்தி கற்பழிக்கப்பட்டாள். இறுதியில் அவரும் கொலை செய்யப்பட்டார். அந்த முகாமில் இருந்த 11பேரில் 9பேர் இதைச் செய்துள்ளனர்.

அதன் பின்னர் அனைவரது சடலங்களும் அவர்களது மூன்று சைக்கிள்களும் புதைக்கப்பட்டு சர்வசாதாரணமாக இந்த சம்பவம் மூடி மறைக்கப்பட்டது.

**கைவிரிப்பு**

இது தொடர்பாக பலர் புகார் கொடுத்தபோதும் எதுவும் தெரியாதென கைவிரிக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் பத்திரிகை தணிக்கையும் அதற்கு சாதகமாக கைகொடுத்திருந்தது.

பொலீஸாரின் நடவடிக்கை குறித்து காங்கேசன்துறை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி வில்மன் பெரேரா தகவல் தருகையில் :- கடந்த 22ஆம் திகதி இது தொடர்பாக ஆறு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி மேலும் மூன்று பொலீஸார் கைது செய்யப்பட்டதுடன் ''செம்மணி சந்திக்கு'' அருகில் சடலங்கள் புதைக்கப்பட்ட இடமும் கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறினார். ஆனால் ஏற்கனவே எமக்கு கிடைத்த சில தகவல்களின்படி ஒரு 13 வயது சிறுவனே சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த இடத்தை அடையாளம் காட்டியதாக தெரிய வந்தது.

கொழும்பில் இருந்த உறவினர்களுக்கு யாழ் பிரிகேடியர் மூலம் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்ட. அவர்கள் சடலங்களை பிரேத பரிசோதனைக்காக கொழும்புக்கு கொண்டு வரும்படி கோரியிருந்தனர்.

***குமார் பொன்னம்பலம் முயற்சியால்...***

ஆரம்பத்தில் அது மறுக்கப்பட்டு விரும்பிய ஐந்து பேர் மாத்திரம் யாழ் வர இலவச விமான பாஸ் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. எப்படியாயினும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்தின் முயற்சியின் பேரில் கடந்த வியாழனன்று நள்ளிரவு கொழும்புக்கு சடலங்கள் கொண்டு வரப்பட்டன.

ஒரு மாத காலம் புதைக்கப்பட்டு இருந்ததால் சடலங்கள் மோசமாக சிதைந்திருந்தன. கிருஷாந்தியின் சடலமே மிகவும் மோசமாக உருக்குலைந்திருந்தது.

அதன்பின் யாழ்ப்பாண மஜிஸ்திரேட் வழங்கியுள்ள உத்தரவுப்படி சடலங்கள் கொழும்பு பிரதி பொலீஸ் மா அதிபரிடம் கையளிக்கப்பட்டு அரச செலவிலேயே அடக்கம் செய்யப்படும். உறவினர்களிடம் கையளிக்கப்பட மாட்டாது என்று மீண்டும் ஒரு குண்டை பொலீஸார் தூக்கிப் போட்டனர்.

எப்படியாயினும் உறவினர்கள் கெஞ்சிக் கேட்டதற்கிணங்க சடலங்களை இந்து முறைப்படி தகனம் செய்யவும் இறுதிக்கிரியைகளில் உறவினர்கள் சிலர் மாத்திரம் கலந்து கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டது. ஆயினும் நான்கு சடலங்களும் ஒரே பெட்டியில் வைத்தே எடுத்துச் செல்லப்படவும், தகனம் செய்யவும் அனுமதிக்கப்பட்டது தனித்தனி பெட்டிகளில் வைக்கவும் அனுமதிக்கப்படவில்லை. இது இதுவரை உள்ள நிலை விசாரணைகளின் முடிவில் சட்ட நடவடிக்கைகள் எப்படி அமையும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### கிருஷாந்தி மீதான கொடூரத்தை கண்டித்து சுண்டிக்குளி கல்லூரியில் போராட்டம்

யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியான குமாரசுவாமி கிருஷாந்தி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் அக் கல்லூரியின் மாணவிகளும் ஆசிரியர்களும் அமைதியான அமைதிப் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மைதானத்தில் மாணவிகளும் ஆசிரியர்களும் கறுப்புப் பட்டிகளை அணிந்தபடி நின்று தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியதாக வடக்கிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கிருஷாந்தியின் தாயார், சகோதரன் மற்றும் அயல் வீட்டு இளைஞர் ஆகியோர் கொல்லப்பட்டதற்கும் அங்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதாக வடபகுதி தகவல்கள் கூறுகின்றன.

# படகில் தமிழகம் சென்ற 111 அகதிகள் கடலில் கைது

மன்னார் வளயாட்டிலிருந்து படகு ஒன்றின் மூலம் தமிழகம் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த 111 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முதலாளி ஒருவருக்கு சொந்தமான இந்த படகில் யாழ் குடாநாட்டிலிருந்து கிளிநொச்சிப் பகுதியில் தங்கி பின்னர் 'சத்ஜய' ராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து வளையாட்டுக்கு வந்து தங்கியோரே பெரிதும் பயணம் செய்தனர் என்று தெரியவருகிறது.

தலைமன்னார் பொலீஸ் சார்ஜன்ட் கே.பி. மென்டிஸ், பொலீஸ் கான்ஸ்டபிள் ரி.எச். சம்சுதீன் ஆகியோர் இந்த 111 பேரையும் மன்னார் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதிவான் இவர்களை, மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் வி. விஸ்வலிங்கத்திடம் ஒப்படைத்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் இந்த அகதிகளை வை.எம்.சி.ஏ. கட்டிடத்தில் தங்க வைத்து பராமரித்து வருகிறார்.

மன்னார் பகுதி அகதிகளால் நிரம்பி வழியத் தொடங்கியுள்ளதால் அவர்களை பராமரிப்பது கஷ்டமாக இருக்கிறது என்று கச்சேரி வட்டாரங்கள் தெரிவித்தன.

அகதி ஒருவருக்கு ஒரு நாள் உணவுக்காக 25 ரூபா மட்டுமே அரசாங்க நிவாரணமாக வழங்கப்படுறது. பொருள் தட்டுப்பாடு நிலவும் இக்காலகட்டத்தில் மேலதிகமாக வந்து குவியும் அகதிகளை பராமரிப்பது கஷ்டமாக இருக்கிறது என்றும் இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

படகோட்டிகள் இருவரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள். இவர்களை பொலீஸார் தடுத்து வைத்து விசாரித்து வருகின்றனர்.

8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை படகு கட்டணமாக வசதி படைத்த அகதிகள் செலுத்தியிருப்பதாக தெரியவருகிறது.

# பாரிசில் புலிப் பிரமுகர்கள் படுகொலை: சிறீலங்கா அரசபயங்கரவாதமே காரணம்

## பி. பி. சி. க்கு லாரன்ஸ் திலகர் பேட்டி

பாரிசில் நடந்த கொலைகள் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை அழிக்க இலங்கையரசு அனைத்துலகச் செயலகம் எடுத்துள்ள நடவடிக்கை என்று புலிகள் இயக்கம் கூறியுள்ளது. கொழும்பிலுள்ள அரச அதிகாரிகள் இந்தக் குற்றச்சாட்டை ஒப்புக் கொள்ளவோ, மறுதலிக்கவோ இல்லை. பதிலுக்கு அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சியும், வானொலி நிலையங்களும் எல்.ரி.ரி.ஈ வெளியிட்ட அறிக்கையைத் தமது செய்தியறிக்கையில் சேர்த்துக் கொண்டுள்ளன. அமெரிக்க அதிகாரிகள் புலிப்படையினரைப் பயங்கரவாத இயக்கங்கள் பட்டியலில் சேர்க்க விரும்புவதாகவும் அந்தச் செய்தியறிக்கை மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கொலைக்கு அரசாங்கம் தான் பொறுப்பு என ஏன் கருதுகிறீர்கள் எனப் புலிப்படையின் மத்தியக் குழு உறுப்பினரும் புலிகளின் தரப்பில் பேச வல்ல அதிகாரியுமான லோரன்ஸ் திலகரிடம் கேட்டோம்.

சிறிலங்கா இதனை மேற்கொள்வதற்கான நோக்கம் செய்த முறை இவற்றைப் பார்க்கும்போது சிறிலங்கா அரசாங்கத்தின் மீதுதான் முழுமையான குற்றச்சாட்டு அமைகின்றது என்றார்.

### இந்தக் கொலை ஏன்?

கேள்வி : இன்னும் பல ஐரோப்பிய நாடுகளில் உங்கள் அமைப்பு செயல்பட்டு வருகின்றது. எதற்காக பிரான்சில் உள்ள உங்கள் அதிகாரிகளை மட்டும் அவர்கள் கொலை செய்திருக்க வேண்டும்?

பதில் : பேரின்ப நாதனைப் பொறுத்த வரையில் அவர் சர்வதேச ரீதியாக தமிழ் மக்களிடம் இருந்து அவர்களுடைய விடுதலைப் போராட்டத்துக்கு நிதி சேகரிக்கின்ற செயல்பாடுகளில் செயல்பட்டு வந்தார். கஜேனனைப் பொறுத்த வரையில் அவர் சிறிலங்கா அரசாங்கத்தினுடைய மனிதஉரிமை மீறல்கள், அதனுடைய கொடுமைகள், அதனுடைய முண்டு வீச்சு மற்றது ஆட்கள் காணாமல் போவது போன்ற மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்துவதில் முக்கிய செயல்பாடுகளில் ஈடுபட்டு வந்தனர். ஆகவே இந்த செயல்பாடுகளில் ஈடுபட்டு இருக்கின்றனர். அதனால் இந்தச் செயல்பாடுகளில் ஈடுபட்டு இருப்பவர்களை அழிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளின் அல்லது விடுதலைப் போராட்டத்தின் செயல்பாடுகளை முடக்குவதிலும் அதே வேளை சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரத்தை முடக்குவமான முக்கிய நோக்கத்தோடு சிறிலங்கா அரசாங்கம் செயல்பட்டு இருக்கிறது. ஆனால் சிறிலங்கா செய்த வேறு முயற்சிகள் அதாவது தமிழ் மக்கள் எல்லோரையும் மிரட்டி, மற்ற, மற்ற அரசாங்கங்களை இதன் அடிப்படையில் செயல் படுத்த எடுத்த முயற்சிகள் தோல்வி கண்ட நிலையில் தற்போது சிறிலங்கா அரசாங்கத்தினுடைய பயங்கரவாதம் தாயகத்திலிருந்து தற்போது வெளிநாட்டுக்கு பரப்பப்பட்டதை நீட்டப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

### புலிகள் மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதில்?

கேள்வி : நீங்களும் ஆட்களை மிரட்டிப் பணம் எடுப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றனவே?

பதில் : சிறிலங்காவுடைய பிரசாரமாகவும், குற்றச்சாட்டாகவும் இருக்கின்றதே யொழிய இது உண்மையல்ல. தமிழ் மக்கள் தாங்களாகவே விரும்பிப் போராட்டத்துக்கு ஆதரவு தருகிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய இனசனம், உறவினர்கள் மிகவும் கொடுமையான நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் மீது போர் ஒன்று கட்டவிழ்க்கப்பட்டிருக்கின்றது. இப்படியான சூழ்நிலையில் வெளிநாட்டிலுள்ள தமிழ் மக்கள் தாங்களாகவே முன்வந்து வேலை செய்கின்றார்கள். எங்களுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் சிறிலங்கா அரசாங்கம் விசேச பயிற்சி பெற்ற ஏஜென்டை வெளிநாட்டுக்கு அனுப்புகின்றது. அதனுடைய முயற்சி தோல்வி அடைந்த நிலையில் கடைசிச் செயல்பாடாக விடுதலைப் புலிகள் செயல்பாட்டாளர்கள், தமிழ் ஈழ செயல்பாட்டாளர்கள் மீது கை வைத்தல், அல்லது அவர்களைக் கொலை செய்தல் என்ற செயல்பாட்டில் தற்பொழுது இறக்கியுள்ளதைத் தான் இந்த கொலைகள் காட்டுகின்றன.

கேள்வி : புலிப்படையினரும் வன்முறையில் ஈடுபடுவதாக அரசு தரப்பிலிருந்து அல்ல, வேறு பல தரப்பிலிருந்தும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளனவே! அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில் : இவர்களுடைய செயல்பாடுகள் எவ்விதமான வன்செயல் சம்பந்தப்பட்ட செயல்பாடுகள் அல்ல. இவர்கள் வந்து நிதி சேகரிப்பதில் பொறுப்பாக இருந்தார்கள். அந்த நிதி சேகரிப்பிலே சர்வதேச ரீதியாக பல வேறு நாடுகளுக்குச் சென்று எங்களுடைய போராட்டத்தை மக்களுக்கு விளங்கப்படுத்துவதன் மூலம் அவர்களிடம் இருந்து அவர்கள் மனமுவந்து கொடுக்கும் நிதியைப் பெறுகின்ற செயல்பாட்டைச் செய்வதில் தான் நாதன் ஈடுபட்டிருந்தார்.

மற்றவர் ஒரு கவிஞராகவும், எழுத்தாளராகவும், ஒரு பத்திரிக்கையை, அதாவது மாதாந்தச் சஞ்சிகையை வெளியிடுகின்ற ஒரு அறிவாளியாகவும் விளங்கினார். எந்த விதமான வன்செயலிலும் ஈடுபடாத முக்கிய உயிரினங்கள் மீது சிறிலங்கா அரசாங்கம் தான் வன்முறையைப்பாவித்து இருக்கின்றது.

இவ்வாறு, பி. பி. சி. தனது 28-10-96 ஒலிபரப்பில் பாரிஸ் சம்பவம் பற்றியும், லாரன்ஸ் திலகரின் பேட்டியையும் வெளியிட்டுள்ளது.

---

# தமிழக சஞ்சிகைகளில் ஈழச் செய்தி ஒரு பார்வை

### தொகுப்பு :- க. இரத்தினராசசிங்கம்

இந்திய மீனவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு இலங்கை அகதிகளை அழைத்து வருவதாகச் சொல்லப் படுகிறதே...?

அகதிகளை அழைத்து வருவது குற்றம் ஆகாது. மனிதாபிமானச் செயல்! அவர்களிடையே போராளிகள் ஊடுருவி இருக்கிறார்களா என்று கண்காணிப்பது மாநில அரசின் கடமை.

[கல்கி10-11-96 இதழ்( நீங்கள் கேட்டவை) பகுதியில்]

தமிழ் ஈழம் இன்னும் இருண்டு கிடக்கிறது அங்கு போர் அரக்கன் நாள் தோறும் நம் தமிழ் சகோதரர்களைக் கொன்று குவித்து இருக்கிறான். விரைவில் அங்கும் அமைதி ஏற்பட்டு தமிழ் மக்கள் சுதந்திர வாழ்வு பெற்று ஒளி பெற வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

'ஒளி நிறையட்டும்' என்னும் தலைப்பில் மதுரை ஆதீனம் வெளியிட்டுள்ள செய்தி.

[ராணி 10-11-96]

உலகிலேயே அதிக அளவில் மனித உரிமைகள் மீறப் பட்டது இலங்கையில்தான். காரணம் கட்டுப்பாடற்ற இலங்கை இராணுவத்தின் நாசகார வேலைகளும் அப்பாவி மக்களை அழித்தொழிக்கும் வேலையில் அது தொடர்ந்து ஈடுபட்டு வருவதுமேதான். தாங்கள் நிலை கொண்டுள்ள எல்லா இடங்களிலும் உணவுத் தட்டுப்பாடு இல்லை என்று இராணுவம் அறிவிப்புச் செய்தாலும் அங்குள்ள கடைகளில் ஒருவர் இரண்டு கிலோவுக்கு மேல் அரிசி வாங்க முடியாது. ஒரு கிலோ 90 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றால் கொடுமையின் தீவிரத்தை என்னவென்று சொல்வது ?

தமிழ் நாட்டுக்கு பிரபாகரன் அனுப்பியபரபரப்பு தகவல் என்ற தலைப்பில் 18-11-96 நெற்றிகண் இதழில் நீண்ட கட்டுரை வெளியாகியுள்ளது.

இலங்கை அகதிகள் என்ற போர்வையில் விடுதலைப் புலிகளைச் சார்ந்தவர்கள் தமிழகத்தில் ஊடுருவுகிறார்களா என்று கவனிப்பதில், தமிழக அரசு அக்கறை காட்டுகிறதா என்பது சந்தேகத்திற்குரிய விசயமாகி விட்டது. வந்து சேரும் அகதிகளில் அப்பாவிகள் மட்டும் கடுமையாக விசாரிக்கப்பட்டு காவலில் உள்ள விசேஷ முகாம்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். "எச்சரிக்கை" என்ற தலைப்பில் இது தொடர்கிறது.

[துக்ளக் 13-11-96]

---

பண்டா-செல்வா ஒப்பந்தம் நிறைவேறியிருப்பின்

# இன்றைய துரதிருஷ்ட நிலை இலங்கையில் ஏற்பட்டிருக்காது

### தொண்டமான் பேச்சு

பண்டா - செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் நாடு இன்று ஒரு துரதிருஷ்ட நிலையைச் சந்தித்திருக்காது என்று கிராமிய தொழிற்றுறை கால்நடை அபிவிருத்தி அமைச்சரும், இ. தொ. கா. தலைவருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

ஹெல்பொடை தமிழ் வித்தியாலய பாரதி மண்டபத்தில் நடைபெற்ற ரேடியண்ட் 98 என்ற பரிசளிப்பு, புதியக் கட்டிடத் திறப்பு விழா, தையல் பயிற்சி நிலையத் திறப்பு விழா ஆகியவற்றில் பிரதம அதிதியாக கலந்துக் கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது:

1947 ஆம் ஆண்டு என்னுடன் 7 பேர் இந்திய வம்சாவளி மக்களை பிரதிநிதித்துவம் செய்ய பாராளுமன்றம் சென்றோம். ஆனால் ஒரு வருடம் கூட எம்மால் எமது பதவிகளை தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. அன்று ஆட்சி செய்த அரசு பாராளுமன்றத்தில் பிரஜாவுரிமைச்சட்டத்தை கொண்டு வந்து எமது மக்களின் வாக்குரிமையை எளிதாக பறித்தெடுத்து விட்டது.

இந்தியாவின் பாரம்பரியத்தைப்பற்றிநாம் வெறுமனே பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. இளம் சந்ததியினர் கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும். படித்து முடித்து விட்டு என்ன செய்வதென்று யோசிப்பதை விட்டு சமூக வளர்ச்சிக்காகவாவது நீங்கள் கல்வியைக் கற்க வேண்டும். கல்வியை கற்றபின் என்ன செய்யலாம் என்ற வழி மிகவும் பிரகாசமாக இருக்கும்.

க. பொ. த. சாதாரண பரீட்சை எழுதிவிட்டால் மட்டும் போதாது. அதில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற வேண்டும். அதே போல் உயர்தர பரீட்சை எழுதி விட்டால் போதாது. அதிலும் 4 பாடங்கள்திறமைச்சித்தி பெற வேண்டும். அப்போது தான் பல்கலைக் கழகம் செல்ல முடியும். அன்று சிங்கள- ஆங்கில பத்திரிகைகள் இந்தியக் கூலி மக்களுக்கு வக்காலத்து வாங்குகிறார் தொண்டமான் என்று விமர்சனம் செய்தன ஆனால் இன்று எம்மில் சிலர் ஏமாற்றியே பிழைப்பு நடத்தப்பார்க்கிறார்கள். அந்த மனப் பான்மை மாற வேண்டும்.

---

### [illegible]

மன்னாரில் கடந்த பல மாதங்களாகதங்கியிருந்தஅரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 126 பேர் கப்பல் மூலம் யாழ்ப் பாணம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேலும் 200 பேர் யாழ்ப் பாணம் செல்வதற்காக மன்னாரில் காத்திருக்கின்றனர்.

யாழ் செல்வதற்காக இவர்கள் தமது பெயர்களை பதிவு செய்து மூன்று மாதங்களாகின்றன. மீண்டும் கப்பல் சேவை எப்பொழுது நடைபெறும் என்று தெரியாதவர்களாக அங்கலாய்த்தவர்களாக இருக்கின்றனர்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# இந்தியாவைத்தவிர வேறு மத்தியஸ்தநாடு ஏது? சந்திரிகா தெளிவுபடுத்தட்டும்!

**- கேயாரி -**

மூன்றாம் நாடு ஒன்றின் ஒத்துழைப்புடன் மீண்டும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப் போவதாக இலங்கை அரசு ஒரு அறிவித்தலை திடீரென விடுத்துள்ளது.

இதற்கு பதிலளிக்கும் வகையில் விடுதலைப் புலிகளும் மூன்றாம் நாடு ஒன்றின் ஒத்துழைப்புடன் இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என தெரிவித்துள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் எது உண்மை எது பொய் என நாம் பட்டி மன்றம் நடத்த வேண்டிய அவசியம் இல்லை எனினும்,

ஈழப் பிரச்சினையில். நடந்து மு(றி)டிந்து போன பல பேச்சு வார்த்தைகளில் இதுவும் ஒன்றாக இருக்கலாம் என மக்கள் எண்ணலாம்.

அல்லது இலங்கை இராணுவம் தனது இழந்த பலவீனத்தை மீளப் பெற்றுக் கொள்ளவும் ஆட்படை, ஆயுதக் கொள்வனவு என ஈடுபடுவதற்கும் இதனை ஒரு சாட்டாக ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

அல்லது புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள் இனிமேல் நாம் சொல்வதைத்தான் அவர்கள் கேட்பார்கள் அல்லது நிர்ப்பந்திக்கலாம் என இலங்கை அரசு ஏன் நினைக்கக் கூடாது. இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாடு உள்ள பகுதியில் வேலியே பயிரை மேய்ந்த கதையாக இராணுவத்தினர் செய்த மனிதாபிமானமற்ற படுகொலைகள் இன்று உலகம் பூராவும் பரப்பப்பட்டுவிட்டது.

அந்தத் திசையில் இருந்து உலகின் கவனத்தை திருப்புவதற்கான இந்தப் பேச்சு வார்த்தை என்ற அறிவிப்பை ஏன் அரசாங்கம் வெளியிட்டிருப்பதாக மக்கள் நினைக்கக் கூடாது.

''புத்த மத ஆலயங்கள் மீது தாக்குதல் தொடுத்தால் தமிழ்மக்கள் மேல் பதில் தாக்குதல் நடத்துவேன் என வீர முழக்கமிட்ட சமாதானப் பிரியை'' என வர்ணிக்கப்பட்ட சந்திரிகா அம்மையார் அந்தச் செய்தியில் இருந்து மக்களை திசை திருப்புவதற்காக ஏன் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கக் கூடாது.

வட மராட்சி, யாழ்ப்பாணம், தென்மராட்சி, கிளிநொச்சி என முன்னேறிய இராணுவம் புலிகள் பின் நோக்கி ஓடிவிட்டார்கள் எனப் பெருமைப்படும் இந்த வேளையில் ஏன் இந்தப் பேச்சு வார்த்தை நாடகம் எனவும் மக்கள் எண்ணாமல் இருக்கமாட்டார்கள். ''தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும்'' என்ற குறையில் இலங்கையில் ஏற்பட்ட பல பிரச்சனைகளுக்கு இந்தியா முன்னின்று உதவி புரிந்துள்ளது. அதனால் உபத்திரவப்பட்டும் உள்ளது.

கொழும்பில் எண்ணெய்க் கிணறு எரிந்த போதும், மத்திய வங்கிகள் கட்டடம் வெடிகுண்டில் தகர்ந்த போதும் இந்தியாவை நாடிய இலங்கை அரசாங்கம் தற்போது வேறொரு மூன்றாவது நாட்டிடம் சரணடைவது ஏன்?

ஈழத் தமிழர் பிரச்சனைபற்றி ஆதி முதல் அந்தம் வரை அறிந்து வைத்து அதற்கேற்ப பல நடவடிக்கைகளை மேற்கொண்டது இந்திய அரசாங்கம்.

தமிழ் மக்களின் கெட்ட காலம் தமிழ் நாட்டில் நடைபெற்ற 'ராஜிவ் காந்தி'' படுகொலைச் சம்பவம் ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதை பின்னுக்கு தள்ளியது.

இந்தியாவின் இத்தகைய ஒரு நிலைதான் இலங்கை அரசின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு வழி வகுத்துக் கொடுத்தது என்றும் நம்பலாம். ஆனால் இந்தியாவின் நிலை ஈழத்தமிழர் விடயத்தில் இனிமேல் மாறாது என இலங்கை அரசு பகல் கனவு காண்பதும், மூன்றாம் நாடு ஒன்றின் உதவியை நாடுவதும் உண்மையான ஒரு பேச்சு வார்த்தை ஆரம்பமாவதற்குரியத் அறிகுறியாக தென்படவில்லை.

இலங்கை அரசாங்கமோ அல்லது பேச்சுவார்த்தையில் ஈடுபடும் மறுதரப்பினரோ இதுவரை காலமும் உண்மையான இதய சுத்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்பது பேச்சுவார்த்தை முடி[றி]வுக்கு பிற்பாடுஇருதரப்பும் வெளியிடும் அறிக்கைகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கும்

இனிமேல் நடைபெறப் போகும் பேச்சுவார்த்தையும் இப்படியாக நடந்து முடிந்ததைப் போல் நடைபெறக் கூடாது என நினைக்கிறோம்.

ஈழத்தமிழ[illegible] விடயத்தில் 1990 முதல் 1995 வரை இந்திய அரசாங்கம் கடைபிடித்து வந்த நடைமுறைகளில் ஓரள்வு தளர்வு ஏற்பட்டு தமிழ்நாட்டுக்கு அகதிகள் ஓடோடி வரக்கூடிய சூழ்நிலைகளும் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலைய்யில் போராளிக் குழுக்களும், ஏனைய தமிழ் அமைப்புகளும் இலங்கைத் தமிழர் விடயத்தில் 'இந்தியா தலையிட வேண்டுமென சூசகமாக விரும்புகின்றன.

இவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளி சந்திரிகா அம்மையார் காட்டும் அந்த மூன்றாவது உலக நாடு எது என்பது உண்மையாக மக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

எடுத்தோம் கவிழ்த்தோம் என்று இருக்காமல் நிதானமாக, எதிர்கால நலன்களை கருத்தில் கொண்டு பேசுவதே பழைய அவநம்பிக்கையில் இருந்து மக்கள் விடுபவதற்கு வழி வகுக்கும்.

# மேயர் ஸ்டாலினுக்கு சந்திரகாசன் வாழ்த்து

**ஈழத்தமிழர் இடர்களைய கோரிக்கை**

சென்னை மாநகராட்சி மேயராக அமோக ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு மு.க. ஸ்டாலினுக்கு, ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகத் தலைவர் திரு. சா. செ. சந்திரகாசன் அவர்கள் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் மூலம் ஈழத்தமிழர் இடர் களைய ஏற்பன விளையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். தம் வாழ்த்துச் செய்தியில் திரு. சந்திரகாசன் கூறியிருப்பதாவது:

நடைபெற்று முடிந்த மாநகராட்சித் தேர்தலில் தாங்கள் மகத்தான வெற்றி பெற்று, இந்தியாவின் மிக மூத்த சென்னை மாநகராட்சியின் தந்தையாக, மாநகர மக்களின் மனமார்ந்த முழு ஆதரவுடன் பொறுப்பேற்று வரலாறு படைத்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவதுடன் மனமார வாழ்த்துகிறோம்.

எமது சார்பில் மட்டுமின்றி, ஈழத் தமிழினத்தின் சார்பிலும், இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கும் இலங்கை ஏதிலி மக்களின் சார்பிலும் உளமார்ந்த, புகழோங்கும் உயர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை தமிழ்நாட்டின் தலைநகராக மட்டுமின்றி, ஒரு காலத்தில் சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கீழையுலகத் தலைநகராகவே விளங்கிய பெருமை மிக்கதாகும். அம்முறையில் எமது இலங்கைத் தமிழ் மக்களின் தலைநகராக விளங்கிய பெருமையும் அதற்குண்டு. அத்தகைய பெருமை மிக்க மாநகரின் முதற்குடிமகனாக - மேயராக தற்காலத் தமிழ் இளைய தலைமுறையின் தளபதியாகிய தாங்கள் பொறுப்பேற்றிருப்பது எமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

தங்களின் தந்தையும் தமி தலைவருமாகிய கலைஞரைப் போலவே ஈழத் தமிழினத்தின் இடர் களைய தாங்களும் பாடுபடுவீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அதிலும் அகதிகள் துயர் தீர்க்க ஆவன புரிவீர்கள் என்று நம்புகிறோம்.

வரலாற்று வெற்றியினை ஈட்டியிருக்கும் தாங்கள் புதிய வரலாறுகள் பலவற்றைப் படைத்து வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம்.

இவ்வாறு, தமது வாழ்த்து செய்தியில் திரு. சந்திரகாசன் எழுதியுள்ளார்.

# விமானப்படையிடம் இஸ்ரேலிய 'ஸ்மார்ட்' குண்டுகள்

இஸ்ரேலினால் புதிதாகத் தயாரிக்கப்பட்ட இலக்குத் தவறாது தாக்கும் குண்டுகளை இலங்கை விமானப்படை பெற்றிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. புலிகள் இயக்கத் தலைவர் வழமையாக இரகசிய இருப்பிடத்தை மாற்றிக் கொள்ளும் பொழுது பயன்படுத்தும் வாகன அணியைக் குறி வைக்கவே 'ஸ்மார்ட் பொம்ஸ்' என அழைக்கப்படும் இந்தக் குண்டுகள் பெறப்பட்டிருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் பாலஸ்தீன தீவிரவாத முக்கியத் தலைவர் ஒருவர் வாகன அணியில் செல்லும் பொழுது அவரைக்கொல்ல இதே குண்டுகளையே இஸ்ரேல் பயன்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் குண்டுகள் பற்றிய தகவல்களுக்கு மத்தியிலேயே முல்லைத்தீவு பகுதிக் காடுகளில் உள்ள புலிகளின் தலைவரின் மறைவிடங்கள் மீது இராணுவ ஹெலிகொப்டர்கள் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவுக்கு தென்மேற்கே நெடுங்கேணி காடுகளில் அமைந்துள்ள இந்த மறைவிடங்கள் மீதான தாக்குதல்களால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லையென இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

# வருவாய் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் கிரிராஜா கோழி வழங்கல்

தமிழ் நாட்டில் அமைந்துள்ள ஈழ அகதிகள் முகாம்களில் நலிவுற்றோர் மற்றும் விதவைகளின் வருவாயைப் பெருக்கிடும் நோக்குடன் கிரிராஜா எனும் புதிய இனக் கோழிகளை ஒரு மாதம் வரை வளர்த்து வழங்கி வருகின்றோம். இத்திட்டத்தின் முதல் கட்டமாக 102 பேருக்கு 1047 கோழிகள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி, காட்டுமன்னார்குடி, காமராஜர் மாவட்டம் கோபால்சமுத்திரம், சிதம்பரனார் மாவட்டம் தாப்பாத்தி, புதுக்கோட்டை மாவட்டம் தோப்புக்கொல்லை, திருச்சி மாவட்டம் வாழவந்தான்கோட்டை, இரும்பூதிப்பட்டி, செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் கடப்பாக்கம் ஆகிய முகாம்களில் 2250 குஞ்சுகள் வளர்க்கப்பட்டு வருகின்றது. விரைவில் அவை வழங்கப்படும்.

முகாம்களில் கோழி (புழக்கடை) வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் கிரிராஜா முட்டைகள் மூலம் இவ்இனத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். நாட்டுக் கோழியில் குஞ்சு பொரிக்கக் கூடிய கிரிராஜா முட்டைகள் கையிருப்பில் உள்ளன. நெல்லை மண்டலத்திற்குட்பட்டவர்கள், நெல்லை மண்டல அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

தகவல் : சீனித்தம்பி ரவிச்சந்திரன்
(வருவாய் ஊக்குவிப்பு ஒருங்கிணைப்பாளர்)

மண்டலப் பொறுப்பாளர்,
ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம்,
இல: 164 ஜே 6
புலித்தேவர் நகர், சங்கர் நகர் அஞ்சல்
தாழையூத்து,
நெல்லை—627 357.

www.padippakam.com



# கவிதைச் சரம்

## மன்னாரில் உணவுத் தட்டுப்பாடு பேரீச்சம்பழத்துடன் தேநீர் அருந்தும் மக்கள்

மன்னார் மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சீனிக்கு தட்டுப்பாடு நிலவுவதால் பெரும்பாலான மக்கள் பேரீச்சம்பழத்தைக் கடித்துக் கொண்டே தேநீர் அருந்தும் நிலைமை உருவாகியுள்ளது.

கோதுமை மா கடைகளில் இல்லாததால் பாணும் கிடைப்பதில்லை. கடந்த ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் மன்னாருக்கு உணவுக் கப்பல்கள் சீராக வராத காரணத்தினாலேயே தட்டுப்பாடு உருவாகியிருக்கிறது.

இதேவேளை கற்பிட்டி மன்னார் படகு சேவையையும் தினமும் நடத்த முடியாமல் உள்ளது' கடற்படையினர் பாதுகாப்பு வழங்கினால் மட்டுமே படகு சேவையை நடத்தலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக எந்தவொரு அத்தியாவசிய உணவுப் பொருளையும் மன்னாருக்குக் கொண்டுவர முடியாதிருக்கிறது.

கற்பிட்டி மன்னார் படகு சேவையை வாரத்தில் ஒரு தடவை நடத்துவதே பெரும் பிரச்சினையாக உள்ளதென படகு உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

மன்னாருக்கு கப்பல் மூலம் உணவுப்பொருள்களை கொண்டு வருவதற்காக முயற்சிகளில் அரசாங்க அதிபர் எஸ்.எம். குருஸ் ஈடுபட்டுள்ளார்.

---

## கிளிநொச்சியில் இருந்து 30 ஆயிரம் பேர் இடம் பெயர்வு

அண்மைய சில நாள்களில் கிளிநொச்சியில் இருந்து சுமார் 30 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் கிளிநொச்சியின் மேற்பகுதி, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

முல்லைத்தீவில் 20 ஆயிரம் பேர் அகதிகளாக இடம் பெயர்ந்து வந்துள்ளதாக தீர்வு செய்யப்பட்டுள்ளது.

## தொண்டு துலங்கட்டும் தூயோன் புகழ்போல...

கே. எஸ். காளிமுத்து
இ. அ. முகாம், வெம்பக்கோட்டை



அன்று மனுக்குலத் துயர் துடைக்க பிறந்தார் ஏசுபிரான்.

இன்று ஈழமக்கள் துயர் துடைக்கும் பணியில் அவர் வழி நடக்கும் பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு எமது இதயம் நிறைந்த நன்றியின் காணிக்கைகள்!

வசனம்

குரல் : என்ன மனுக்குலமே நீ இன்று மகிழ்ச்சியில் திளைக்கின்றாய்! இது என்ன மாரிக்காலமோ?

பதில் : இல்லை! இல்லை!

குரல் : அப்படியானால்?

பதில் : எங்கள் பாவங்களில் இருந்து நாங்கள் விடுதலை பெறும் காலம் வந்து விட்டது!

குரல் : எப்படி?

பாடல்

விண்ணில் தவழும் வெண்ணிலா! மண்ணில்
வந்த விந்தையாய்!
எண்ணில்லாத இதயங்கள்!
தன்னை மறந்து வாழ்த்தவே
கன்னி மரியின் புதல்வனாய்!
எங்கள் ஏசு பிறந்த நாள்! (விண்)
ஆரிரோ!...ஆராரிரோ...ஆரிரோ...ஆராரிரோ...

மாய உலகின் மடியிலே!
மனுக்குலமே வீழ்ந்ததால்!
தாயை இழந்த சேயைப் போல்
தவித்த மண்ணைக் காத்திட!
ஜெருசலத்தில் பிறந்தவர்! தேவமகனாய்
வளர்ந்தவர்! (விண்)
ஆரிரோ...ஆராரிரோ... ஆரிரோ...ஆராரோ......

பாவி எம்மை மீட்டிட பாலன் வந்த நாளிது!
தேவ கானம் பாடி நாம் தீபத் திரிகள் ஏற்றினோம்!
தூய அன்பை அறிந்ததால்
நாளை உலகை நம்பினோம்! (விண்)
ஆரிரோ...ஆராரிரோ...ஆரிரோ...ஆராரிரோ......

## ஈழம் மலர்ந்திடுமா ?

காடிழந்த புள்ளி மானாய்
கடல் தாண்டி வந்தாய்
நாடிழந்து நாளெல்லாம்
நீடு துயர் கொண்டாய்!
தமிழகம் ஓடி வந்தாய்
தமிழன்னை நாடிவந்தாய்
அகதி எனும் பெயரினிலே
அமைதியாக வாழுகின்றாய்!
பண்பு எனும் சொல் மறந்தாய்
பணத்தைக் கண்டு காதல்கொண்டாய்!
மணம் செய்ய ஆசை கொண்டாய்

படிப்பகம்

மணப் பெண்ணை நாடிச்சென்றாய்
குணம் இங்கு தேவையில்லை
பணம் வந்து சேர்ந்ததனால்!
அன்று உணவின்றி நீ வந்த
ஓலங்கள் மறந்துவிட்டாய்
கனவெனும் சோலைதனில்
கனவாகக் கரைந்து விட்டாய்
நீ வந்த பாதையினை
நிர்மூல மாக்கி விட்டாய்!
இருள் சூழ்ந்த உன்வாழ்வில்
ஒளி வந்து வீசிடுமா?
அழிகின்ற என் ஈழம்
அரும் பாகி மலர்ந்திடுமா?

S. நிர்மலா
12-ம் வகுப்பு
சின்னபள்ளி குப்பம்

## விட்டில் பூச்சிகள்!

விடியலைத் தேடுகின்ற
விட்டில் பூச்சிகள் நாம்
வீடிழந்து நாடிழந்த
வேதனையைச் சுமந்து
உறவையும் உணர்வையும்
பிரிந்து வந்தோம்
உறக்கமின்றிப் பலநாள்
விழித்திருந்தோம்
தமிழகம் ஓடிவந்தோம்
தஞ்சமே ஆகி நின்றோம்
உணவும் உறக்கமும்
கிடைத்தன இங்கு
உணர்வுகள் ஏனோ
மரத்துப் போயின!
தனது கவலையை மறந்து விட்டு
கலாச்சாரத்தை அகற்றி விட்டு
காணுகின்ற இடமெல்லாம்
கள்ளுக்கடைப் பேரணியே!
குழந்தைகளும் புகைபிடிக்கும்
கொடுமை மிக்க அவலங்களே!
தன்னிலை உணருமுன்பே
தானறியாத திருமணங்கள்
ஐயகோ.....
இருளில் வாழுகின்ற இவர்களுக்கு
ஒளி தருவது யாரிங்கே?

வே. மோகனா
8-ம் வகுப்பு மாணவி
சின்னப்பள்ளி குப்பம்

## ஈழம் படும் பாடு!

- புன்னைவாணன் -

ஈழம் எரிகிறதே—எங்க
இதயமெல்லாம் கொதிக்கிறதே
வாழ வழியில்லையே—அங்கு
வந்த சண்டை ஒழியல்லையே (ஈழம்)

சிங்கள இனவெறியால்—அங்கு
செந்தமிழர் பிணமாகிறோம்
எங்கள் வாழ்வை நாங்கள் வாழ—அவர்
இணங்காததால் ரணமாகிறோம் (ஈழம்)

ஒன்றிலங்கை என்று சொல்லி—அவர்
குண்டு வீசிக் கொன்றிடுறார்
பன்றி மாடு நாயைப்போல—தமிழ்ப்
பரம்பரையை எண்ணிடுறார் (ஈழம்)

புலிகள் என்று சாட்டுச் சொல்லி—தமிழ்ப்
பிள்ளைகளைக் கொல்லுகின்றார்
பழிகள் போட்டுத் தமிழ் நிலத்தில்—சிங்களப்
படைகள் கொண்டு குவிக்கின்றார் (ஈழம்)

உழவுமில்லை தொழிலுமில்லை—அங்கு
உணவு உடை மருந்துமில்லை
இழவு வீடு போலாச்சே—எங்க
எண்ண மெல்லாம் பாழாச்சே (ஈழம்)

ஆழக் கடல் கடந்து—அதனால்
அகதியாக ஓடிவந்தோம்
நாளை சிக்கல் தீருமென்றால்-மீண்டும்
நாடுசெல்ல நாடிவந்தோம் (ஈழம்)

பாடிப் பறந்த குயில்-இறக்கை
பறித்ததனால் துடித்து வந்தோம்
வேடிக்கை பார்த்திராமல்-எங்க
விழிநீரைத் துடைத்திடுவீர் (ஈழம்)

பன்னாட்டுச் சமுதாயமே-எங்க
பார தத்தின் சோதரரே
கண்ணான மாந்தநேயம்-கொண்டு
கவலைமாற்றி எமைத் தேற்றுவீர் (ஈழம்)

www.padippakam.com



# கிளிநொச்சி மாவட்டத்தில் மனிதாபிமான உதவிகளுக்காக ஏங்கித்தவிக்கும் அகதி மக்கள்

''சத்ஜய இராணுவ நடவடிக்கைகளினாலும் தொடர்ச்சியான பொருளாதாரத் தடைகள் நாட்டின் பாதுகாப்பு காரணமாக மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு வகையான கெடுபிடிகளாலும் கிளிநொச்சி மாவட்டம் சொல்லொணாத கஷ்டங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் ஆளாகித் தவிக்கின்றது.

தொடர்ச்சியான இடம்பெயர்வு காரணமாக மக்கள் நாடோடிகளாக ஓரிடத்தில் தங்கியிருந்தாவது ஆறுவதற்குத் தேவையான மனிதாபிமான உதவிகளோ பராமரிப்புகளோ இன்றி அலைந்து அலைக்கழிக்கின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தின் நிரந்தரக் குடிசனத்தொகை ஒரு லட்சத்து 35 ஆயிரம்.

### அகதிகள் பெருக்கம்

கடந்த 1990-ஆம் ஆண்டு தொடக்கம் 'சூரியக்கதிர்'' இராணுவ நடவடிக்கைகள் வரையிலான காலப்பகுதிகளில் உள்ளூரிலேயே இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் யாழ்ப்பாணம் உட்பட வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் என மொத்தமாக 2 லட்சத்து 49 ஆயிரத்து 631 பேர் அகதிகளாக இங்கு உள்ளார்கள். (2 49,631 பேர்)

இதன் விபரம் வருமாறு:-

கடந்த 1990-ம் ஆண்டு முதல் 19 நலன்புரி நிலையங்களில் 13 ஆயிரத்து 500 பேர் அகதிகளாக உள்ளனர். இதே வேளையில் 33 ஆயிரம் பேர் உறவினர், நண்பர்களது விடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்து வாழ்ந்து வருகிறார்கள்.

கடந்த வருடம் ஜுலை மாதம் யாழ்குடா நாட்டில் இடம் பெற்ற 'முன்னோக்கிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கை காரணமாக 3706 பேர் யாழ்குடா நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தஞ்சம் புகுந்தார்கள்.

முதலாம் கட்ட ''சூரியக்கதிர்'' நடவடிக்கைகாரணமாக ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 906 பேர் இடம் பெயர்ந்து யாழ் மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தஞ்சமடைந்தார்கள்.

இரண்டாம் கட்ட ''சூரியக்கதிர்'' நடவடிக்கையின் போது 51 ஆயிரத்து 519 பேர் இடம் பெயர்ந்து யாழ் மாவட்டத்திலிருந்து கிளிநொச்சியில் தஞ்சம் அடைந்துள்ளார்கள்.

இந்த நிலைமையில் 'ஆனையிறவு முகாமிலிருந்து கிளிநொச்சி நோக்கி ஆரம்பிக்கப்பட்ட ''சத்ஜய'' இராணுவ நடவடிக்கை காரணமாக சுமார் 2 லட்சம் பொதுமக்கள் (கிளிநொச்சி மாவட்டத்தின் நிரந்தரக் குடிமக்களும் ஏற்கனவே இடம்பெயர்ந்து வந்து இங்கு தஞ்சம் அடைந்திருந்த வர்களுமாக) கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் மிகவும் நெருக்கமாகக் குடியிருந்த நிலைமையில் இருந்து இடம் பெயர நேர்ந்துள்ளது.

### தங்குமிடமின்றித் தவிக்கும் மக்கள்

இவர்கள் உள் மாவட்டத்திலேயும் அயல் மாவட்டங்களான முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் தஞ்சமடைந்துள்ளார்கள்.

கிளிநொச்சி நகரம் அரச படைகளிடம் வீழ்ச்சி அடைவதற்கு சற்று முன்பு வரை மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் படி கிளிநொச்சி மாவட்டத்தில் 31 நலன்புரி நிலையங்களில் 7830 பேரும், உறவினர், நண்பர்களது வீடுகளில் ஒரு லட்சத்து 4843 பேருமாக மொத்தம் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 673 பேர் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்குச் சென்று தஞ்சமடைந்தவர்களின் புள்ளிவிபரங்கள் தெரியவில்லை.

இதே வேளையில் கடந்த சில வாரங்களாக மிக மோசமாக இடம் பெற்றுவருகின்ற கிளிநொச்சி மோதல்கள், எறிகணை வீச்சுக்கள், வான் தாக்குதல்கள் காரணமாகவும் விட்டு விட்டுப் பெய்த மழை காரணமாகவும் மக்கள் இடத்துக்கு இடம் நகர்ந்து மழைக்கு ஒதுங்குவதற்கும், உயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குமாக ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். இதனால் பதிவுகள் மேற்கொள்ளமுடியாதுள்ளது. இடம் பெயர்ந்தவர்களில் 75 வீதமானோர், உயிர் பாதுகாப்பிற்காக ஓடிய உடற் களைப்பைப் போக்குவதற்காக தலைசாய்ந்து தரித்து நிற்பதற்குரிய தங்குமிடங்கள் கிடைக்காமல் கஷ்டமடைந்துள்ளார்கள். இடத்துக்கு இடம் தங்கும் இடம் தேடி அலையும் இவர்களது நிலைமை பரிதாபகரமாக உள்ளதுடன் விரைவில் விடிவு காணப்பட முடியாததுமாகவே உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்தின் நிவாரண உணவுப் பொருட்கள் எதுவும் கையிருப்பில் இல்லை. இதனால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உணவு முத்திரைகள் மற்றும் வகைகளில் விற்பனைக்காக வைத்திருந்த கையிருப்பு உணவுப் பொருட்களே இடம் பெயர்ந்த மக்களைப் பட்டினி நிலைமையில் இருந்து பாதுகாப்பதற்காக இரவல் பெற்று விநியோகிக்கப்படுகின்றது.

கடந்த 9-9-96-ஆம் திகதி முதல் கடந்த மாத இறுதி வாரம் வரையும் 600 மெட்ரிக் தொன் அரிசியும், 710 மெட்ரிக் தொன் கோதுமை மாவும், 780 மெட்ரிக் தொன் சீனியும், 330 மெட்ரிக் தொன் பருப்புமே அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகிப்பதற்கென கிடைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு சீரான நிவாரண உணவுப் பொருள்களின் விநியோகம் மேற்கொள்ளப்படாததனால் இங்குள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு சுமார் மூன்று மாதகாலப் பகுதிக்குரிய நிவாரண உணவுப் பொருட்கள் வழங்கப்படாமல் பாக்கியாக உள்ளது.

# உணவும் மருந்துமா போரியல் ஆயுதங்கள்?

## சிறிலங்கா அரசு செய்வது நியாயமா?

கிளிநொச்சியிலிருந்து வெளியேறியுள்ள மக்களுக்கு அவசியமான மருத்துவ வசதிகள் செல்லமுடியாத நிலை இன்னும் தொடர்கின்றது. இவர்களுக்குத் தேவையான மருந்துகளை அனுப்பி வைக்க அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை. சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களும் அனுமதிக்கப்படவில்லை.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துகளுக்கான தடை கூட ஒரு போரியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுவது வன்னிப்பகுதி மக்களை மிகவும் மோசமாகப் பாதித்திருக்கின்றது. யுத்தத்தில் பயன்படுத்தப்படும் பொருள்களுக்கான தடை என ஆரம்பித்து இப்போது மருந்துப் பொருள்கள் கூட தடை செய்யப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த பல இலட்சக் கணக்கானவர்கள் வன்னிக் காட்டுக்குள் இருக்கின்றார்கள். சுகாதாரச் சீர்கேடுகள் காரணமாக தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாய நிலையும் வன்னியில் தோன்றியுள்ளது.

நீரைச் சுத்திகரிப்பதற்கு வேண்டிய குளோரின் கூட தாண்டிக்குளத்தைத் தாண்டிக் கொண்டு செல்ல முடியாத நிலை தொடர்கின்றது. உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகாரம் வழங்கியுள்ள மருந்து வகைகளைக் கொண்டு செல்லக் கூட அனுமதி கிடைக்கவில்லை.

வடபகுதி அகதிகள் மத்தியில் மருத்துவப் பணியில் ஈடுபட்டுள்ள பிரான்ஸின் எம். எஸ். எப். மருத்துவக்குழு இதற்கான அனுமதியைக் கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகத்தில் கேட்டிருந்தது. இன்னும் அனுமதி கிடைக்கவில்லை என எம் எஸ். எப். பிரதிநிதி தெரிவித்திருக்கின்றார்.

இதனைவிட கிளிநொச்சி மாவட்டத்தில் பாதுகாப்புப் படைகள் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ள காரணத்தினாலும் இவ்வமைப்பின் மருத்துவச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மல்லாவியில் தங்கியுள்ள தமது மருத்துவக்குழு வெளியே சென்று மருத்துவம் செய்ய முடியவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இதனைவிட தம்மிடம் மருத்துவ உதவி கோரி வரும் பொதுமக்களுக்கு மருத்துவம் செய்யவும் தம்மிடம் மருந்துகள் எதுவும் இல்லை என்ற ஆதங்கத்தையும் அவர் வெளியிட்டிருக்கின்றார்.

யுத்தம், இடம்பெயர்வு என்பவற்றால் இலட்சக்கணக்கானவர்கள் அகதிகளாகி சுகாதார வசதிகளற்ற பகுதிகளில் குடியிருக்க முற்பட்டுள்ள நிலையில் தொற்று நோய்கள் பரவுவது தீவிரமாகவே இருக்கும். இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய மருந்துவ வசதிகளை அனுப்பி வைக்கும் பொறுப்பு அரசையே சார்ந்தது.

யுத்தம் காரணமாக ஒரு பகுதிக்குச் சில பொருள்கள் அனுப்பி வைக்கப்படுவதைத் தடை செய்வது தவிர்க்க முடியாததாகலாம். ஆனால் மக்களுக்கு அடிப்படைத் தேவையாகவுள்ள மருந்துகளைத் தடை செய்வது ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகும்.

யுத்தம் நடக்கும் நாடுகளில் இவ்வாறான நிலைமைகளில் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் மருத்துவப் பணியில் ஈடுபட அனுமதிக்கப்படுகின்றன. யுத்தத்தின் காரணமாக தடைகள் மக்களை எவ்வகையிலும் பாதிக்காத வகையில், சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் முழுமையான மருத்துவப்பணியில் ஈடுபட அரசாங்கம் அனுமதி வழங்குவது அவசியமாகும்.

இவ்வாறு 'வீரகேசரி' நாளேடு தன் ஆசிரியத் தலையங்கம் ஒன்றில் சாடியுள்ளது.

# உங்கள் நலம் உலகத்தமிழர் நலமாகும்: கலைஞரை உசாவி சந்திரகாசன் மடல்

அண்மையில் உடல்நலங் குன்றி ஓய்வெடுத்துக் கொண்டிருந்த தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களின் நலனை விசாரித்து, ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத் தலைவர் திரு. சா.செ. சந்திரகாசன் 'அவர்கள் எழுதியிருந்த மடல் வருமாறு:

தாங்கள் உடல் நலம் குன்றி மருத்துவம் செய்து வருகிறீர்கள். அதன் காரணமாக தங்கள் நிகழ்ச்சிகள் பிற்போடப்பட்டன என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினோம்.

இடைவிடாத சிந்தனையும், செயற்பாடும் ஓய்வும் ஒழிச்சலுமற்ற உழைப்புதான் தங்கள் உடல்நலக் குறைவுக்குக் காரணம் என்பதை அறியும்போது எமது மொழிக்கும் இனத்திற்கும் தாங்கள் ஆற்றிவரும் அளப்பரிய தொண்டின் இன்றியமையாமை எங்களுக்கு விளங்குகிறது.

இருப்பினும் தாங்கள் எமதுதமிழினத்தின் மூலதனம். உயிர்ப்பின் ஊற்றுக்கண். அதனால் உங்கள் நலம் எம் இனத்தின் நலத்திற்கும் பலத்திற்கும் வளத்திற்கும் இன்றியமையாததாகும்.

ஆகவே, எம் மக்களின் நலனுக்காக உழைக்கும் அதே நேரத்தில், அது ஊறின்றித் தொடர உங்கள் நலனைப் பேணிக் கொள்வதும் இன்றியமையாததாகும்.

''இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக் கையாறாகக் கொள்ளாதாம் மேல்''.

என்று குறளாசான் கூறியிருந்தாலும், எமது கலக்கத்தைத் தவிர்க்க உங்களின் உடல்நலம் குன்றாதிருப்பதும், அதற்குத் தாங்கள் முக்கியத்துவம் கொடுப்பதும் மிக மிக அவசியமாகும். அம்முறையில் தங்கள் உடல்நலத்திலும் கவனம் செலுத்தி எமது மொழி— இன மீட்சிக்காகத் தாங்கள் பல்லாண்டு வாழ-நன்நலத்தை ஆள இறைஞ்சுகிறோம்.

உங்கள் நலமே எங்களின் நலம்.

தாங்கள் என்றென்றும் முழு நலத்துடன் வாழ இயற்கையை இறைஞ்சுகின்றோம்.

இவ்வாறு, தமது மடலில் திரு. சந்திரகாசன் கூறியுள்ளார்.

www.padippakam.com






## மீண்டும் லைட் போஸ்ட் பிணம் வருமா ?

தம்பி... உந்த வெடிச் சத்தங்களைக் கேட்டாக் கூட பழைய பயம் இன்னும் போகேல்லக் கண்டியோ !

உப்பிடித்தான் நான் இங்கை வந்த காலத்தில மேலே பிளேன் பறக்கிற சத்தத்தைக் கேட்டாலே ஆற்றையன் வீட்டுக்குள்ள ஓடி ஒளிச்சிருவன்.

ஆனா இப்ப பரவாயில்லை. சரி மோனை வெடிச் சத்தம் பயம்தான் இன்னும் போகேல்ல.

யாழ்ப்பாணத்தில உப்ப பிளேன் பறந்தாலும் சனம் பயப்படுகிறதில்லையாம்.

ஆனால் எங்கையாவது வெடிச் சத்தம் கேட்டால்தான் வெளியில் போன பிள்ளையளைப் பற்றிய நினைவு வந்துடுமாம்.

யாழ்ப்பாணம் கைக்குள்ள வந்தவுடன் பல்லைக் காட்டிக் கொண்டு திரிந்த, பச்சைச் சட்டைக்காரார்கள் இப்ப பல்லைக் காட்டுறவையக் கண்டால் சந்தேகமாய்ப் பார்க்கினமாம்.

ஏனென்டு கேட்கிறியே. மற்றவையளும் சிரிச்சு, சிரிச்சு ஏதாவது செய்து போடுவினம் எண்ட பயம்தான்.

அதனால இப்ப அவையள் தங்களுக்குள்ளையே எல்லாமாம். வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில ஏறின கதை மாதிரி பச்சை உடுப்புக் காரர்களிடம் மீண்டும் பழைய கதைதானாம்.

தங்கட முகாமைத் தாண்டிப் போற பெண் பிளைப் பிள்ளையளைக் கண்டால் அவையளயோட ஒரு சொறி, சேட்டையெல்லாம் செய்யினமாம்.

உப்பிடித்தான் உவை ஒரு பிள்ளையோட சொறியப் போய் அது மூண்டு பேரைக் கொலை செய்து செம்மணிச் சுடலை வரை போயிட்டுது கண்டியோ.

ஆருக்கும் விசயம் தெரியாது என்டு நினைச்சவயள், இப்ப விசயம் வெளியே வந்ததும் தங்கட சமாதான விரும்பிப் பட்டம் அறுந்து போய் விடுமோ என்டு பயப்படுவினமாம்.

ஆனா ஒவ்வொரு தாய் மாரும் தங்கட பிள்ளையள் வெளியில் போய்ட்டு வீட்டுக்கு திரும்பும் வரையும்அடி வையித்தில நெருப்பைக் கட்டிக் கொண்டுதான் இருக்கினமாம்.

இன்னு மொரண்டையும் சொல்லுறன் கேள் தம்பி.

எங்கடயாட்களில சில பேர் பச்சைச் சட்டைக் காரரோட நல்ல ஒட்டாம்.

ஏனென்டு நினைக்கிறியளே எல்லாம் பண்டமாற்று யாவாரம் தானாம். உப்பிடிப் பட்டவை சில பேர் பழையபடி ''லைட் போஸ்ட்'' இல தொங்குகிறதையும் யாழ்ப்பாணத்தில பார்க்கலாமாம்.

தம்பி! யாழ்ப்பாணச்சனம் இப்ப எப்படா வெளியில போகலாம் எண்ட நினைப்பில தான் இருக்கினமாம் ஆனா வெளியில சொல்லவும் பயமாம்.

என்ன மௌனமையடா மோனை பார்த்தியே.

# தரத்தைக் குறைத்து படைக்கு ஆள் சேர்ப்பதால் நாட்டின் திறத்தை கூட்டிவிட முடியுமா?

### படையிலிருந்து ஓடுவோராலேயே குற்றங்கள் கூடுகின்றன

**அரசுக்கு 'வீரகேசரி' நாளேடு சூடு!**

தராதரங்களைக் குறைத்துப் படைக்கு ஆள் சேர்ப்பதால் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்பட்டு விடாது. படையிலிருந்து ஓடுவோராலேயே பாரிய குற்றங்கள் நடக்கின்றன. எனவே இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதே இன்றையத் தேவை என 'வீரகேசரி' நாளிதழ் தனது ஆசிரியத் தலையங்கமொன்றில் கூறியுள்ளது. அது எழுதியிருப்பதாவது :

இராணுவத்துக்கு உடனடியாக மேலும் பதினையாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதமாக மேற் கொண்டிருக்கின்றது. படைகளில் இளைஞர்கள் சேர்வதை ஊக்குவிப்பதற்காக பல கவர்ச்சிகரமான திட்டங்கள்பற்றிய அறிவிப்புக்களும் வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் இராணுவத்தில் இணைவதற்கான தராதரமும் வெகுவாக் குறைக்கப்பட்டிருக்கின்றது.

*சிறீலங்காப் படை வளர்ச்சி :*

'சத்ஜெய' நடவடிக்கை மூலம் ஆயுதப் படையினர் கிளி நொச்சியைக் கைப்பற்றியிருக்கின்றார்கள். கிளி நொச்சிக்கும் வவுனியாவுக்கும் இடையேயான பாதையைக் கைப்பற்றுவதான் படையினரின் அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்குமெனக் கூறப் படுகின்றது. இவ்வாறான நடவடிக்கை ஒன்றை மேற் கொள்ள இராணுவத்துக்கு மேலதிகமாக ஆட்கள் தேவையாகவுள்ளனர்.

இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே 15,000 பேரை உடனடியாகத் திரட்டுவதற்கு இராணுவம் திட்டமிட்டுள்ளது. அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப் பட்ட ஆள் திரட்டல் முயற்சிகள் எதிர்பார்த்தளவு பயனளிக்காததால் தான் பல கவர்ச்சிகரமான திட்டங்கள் இப்போது அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்நாட்டைப் பொறுத்த வரையில் இராணுவம் என்பது ஒரு சம்பிரதாய பூர்வமான அணியாக மட்டுமே இருந்தது. 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் யுத்தத்தில் ஈடுபடும் ஒரு இராணுவமாக இது மாற்றமடைந்து இதற்காக சில ஆயிரமாக இருந்த துருப்புக்களின் எண்ணிக்கை ஒரு லட்சம் வரைக்கும் அதிகரிக்கப் பட்டது.

*தராதரச் சரிவு*

படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய நிலைமை தீவிரமடைய அதற்காகக் கேட்கப்படும் தராதரங்கள் பெருமளவுக்குக் குறைக்கப் பட்டன. தற்போது வயது எல்லையும், உயரமும் கூடக் குறைக்கப் பட்டிருக்கின்றன. கல்வித் தராதரம் ஏற்கனவே குறைக்கப்பட்டு விட்டது.

இவை அனைத்தும் இராணுவத்தின் தரத்தைக் குறைத்து விடாதா என்பது தான் இன்று எழுகின்ற கேள்வி!

இராணுவத்தில் இணைவதற்கு மூன்று தராதரங்கள் தான் இன்று கேட்கப்படுகின்றன. வயது 18 முதல் 24 வரை இருக்க வேண்டும். உயரம் 5 அடி 2 அங்குலமாக இருக்க வேண்டும். கல்வித் தகைமையும் 8ஆம் தரமாக இருக்க வேண்டும்.

இத்தராதரங்களையுடைய எவரும் நேரடியாகச் சென்று இராணுவத்தில் சேர்ந்து கொள்ளலாம். குடும்பப் பின்னணி போன்ற எந்த விடயங்களும் கவனத்திற் கொள்ளப் படமாட்டா.

*முரண்பட்ட அரசின் நிலை*

இவ்வாறான சூழ்நிலையில் இராணுவத்திலிருந்து வெளியேறுவோர் தொகையும் அதிகரித்துள்ளது நாட்டில் இடம் பெறும் பல்வேறு குற்றச் சம்பவங்களில் படைகளிலிருந்து விலகியவர்களே சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

வெளியேறியவர்கள் திரும்பி வந்தால் மீண்டும் பணியாற்ற அனுமதிக்கப் படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ள அதே வேளையில், படைகளிலிருந்து வெளியேறியவர்களுக்கு தனியார் துறையினர் வேலை வாய்ப்புக் கொடுத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் பல்வேறு கவர்ச்சிகரமான சலுகைகளை அறிவித்து, தராதரங்களையும் குறைத்து ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது இராணுவத்தின் தரத்தைக் குறைத்து விடலாம் என்ற அச்சம் சகல மட்டங்களிலும் எழுவது இயற்கையானதே.

எனவே இனப் பிரச்சினைக்கு சமாதானமான தீர்வொன்றைக் காண்பதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவதன் மூலம் அநாவசியமான யுத்த அழிவுகளைத் தவிர்க்கலாம்.

**யாழ் குடாவிலிருந்து இடம் பெயர்ந்தவர்க்கு மிரட்டல்:**

# ஆசிரியர் திரும்பாவிடில் வேலையிலிருந்து நீக்கப்பட்டு புதியவர் நியமனம்?

யாழ் குடா நாட்டில் இருந்து இடம் பெயர்ந்து, மீண்டும் தமது பழைய பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்காத பாடசாலை ஆசிரியர்கள் கடமையில் இருந்து விலகிக் கொண்டவர்களாக கணிக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக புதிய ஆசிரிய நியமனங்களை வழங்க அரசாங்க உயர் மட்டம் தீர்மானித்துள்ளதாக நம்பகமாகத் தெரிய வருகிறது.

வடமாகாண புனரமைப்பு தொடர்பான மாநாட்டில் யாழ் பாடசாலைகள் தொடர்பாக ஆராயப்பட்ட பின்னரே மேற் கண்ட பணிப்புரை வழங்கப் பட்டதாகத் தெரிய வருகிறது.

'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையை அடுத்து அப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்றும் ஆசிரியர்கள் இந்த மாதத்திற்குள் தங்களது பாடசாலைக்கு சென்று கடமையை பொறுப்பேற்க வேண்டும். அல்லது அவர்களுக்கான சம்பளம் வழங்கப்பட மாட்டாது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதே வேளையில் யாழ் திரும்ப விரும்பும் ஆசிரியர்கள் பலர் கப்பலில் பயணம் செய்ய இடம் கிடைக்காமல் திருமலையில் தண்டாடுகின்றனர் என வடக்கு கிழக்கு மாகாண சபை நிருவாகத்திற்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

இடம் பெயர்ந்த ஆசிரியர்களால் சுமார் இரண்டாயிரம் ஆசிரியர்கள் திருமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்தும் கடமை புரிந்து வருகின்றனர்.

யாழ் நகரில் உள்ள 486 பாடசாலைகளில் 424 பாடசாலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 382 பாடசாலைகள் பழைய பாடசாலை கட்டிங்களிலேயே இயங்குகின்றன. 42 பாடசாலைகள் தற்காலிக கட்டிடங்களில் இயங்குகின்றன. 62 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

'ரிவிரெச' முதலாம் கட்ட இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் சுமார் இரண்டு இலட்சம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அவர்களில் சுமார் 98 ஆயிரம் மாணவர்கள் மட்டுமே பாடசாலைகளுக்கு சமுகமளிக்கின்றனர். சுமார் இலட்சம் மாணவர்கள் குடா நாட்டைவிட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

6 578 ஆசிரியர்களில் தற்பொழுது 4 278 ஆசிரியர்கள் மட்டுமே தமக்குரிய பாடசாலைக்கு சமுகமளிக்கின்றனர். யாழ் குடா நாட்டை விட்டு சுமார் 2,300 ஆசிரியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.


## ''ஈழசுதந்திரன்''

## மாத இதழ் சந்தா விபரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தாசேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம் :

நிர்வாகி
''ஈழசுதந்திரன்''
14, சேட் காலனி முதல் தெரு
மூன்றாம் மாடி,
எழும்பூர், சென்னை-600 008.

www.padippakam.com



## ஈழத்தில் இன்று

குயில்களை எல்லாம் பிடித்துக் கூண்டிலே
குவித்து மூடியடைத்து விட்டு
காக்கைகள் கூட்டம் யாவுமின்று
கச்சேரி போடுகின்றன ஈழத்தில் .......

பூக்கள் வனங்களில் பூத்திருந் துமதில்
புன்னகை என்பது புதிராகிப் போனதே!
பட்ட மரங்கள் மட்டுமேயங்கு எங்கும்
பார்வை விழிகளில் பட்டுத் தெரிகின்றன!

வானத்தில் தெரிகிறது வானவில் கோடுகள் – ஆனால்
வண்ணங்களேனோ அதில் வரையப்படவில்லையே!
வாழ்க்கைகள் நாளும் வழிபட்ட போதும்
வசந்தமேதும் தமிழன் வாசல் வரவேயில்லையே!!

அன்பாள வேண்டிய அழகு ஈழத்திலின்று
அராஜகம், அதிகாரம் ஆட்சி மேடைதனில்-தமிழன்
அழுகையின் கண்ணீரோடு ஆழ்கடலாகிடுமே-எமை
அரவணைக்க ஆளிருந்தால் ஈழம் நிறைவேறிடுமே!

தமிழனின் தலையை முற்றாக மொட்டையடித்து
தலைதனைச் சீவிட சீப்பளித்துப் பயனென்ன?
தன்மானத் தமிழினமின்று தவிப்பதென்ன?
தஞ்சம்தேடித் தரணியெங்கும் தாவுவதென்ன?

இதயங்கள் அத்தனையும் துடிக்காது ஈழத்தில்
இடிவிழுந்தின்று போனதென்ன சோகம்!
இறைமகனே தீர்வதெப்படியெம் ஈழத்தாகம்?-யார்
இல்லையென்றாலும் ஈழம் ஈட்டுவதேயெம் வேகம்

–சோகவி செல்வநாதன்
இ. அ. முகாம், தோப்புக்கொல்லை

## சோகமே சொந்தமா?

**டி. கண்ணன்**
இ. அ. முகாம், புளியம்பட்டி

வானெல்லாம் நட்சத்திரங்கள்
தமிழ் மண்ணிலோ குண்டுச்சத்தங்கள்
தமிழன் போகும் பாதையில் ஷெல் விழுகுது
ஷெல்பட்டுத்தமிழன் உயிர் போகுது
நிலவைப்பார்த்த தமிழனுக்கு
தலையில் குண்டு பாய்ந்தது
அதைப் பார்த்துச் சிங்கள
வெறி இனம் சிரித்தது
நிற்குமா நிற்குமா ஈழத்தில் குண்டுச் சத்தம்?
கேட்குமா கேட்குமா ஈழத்தில்
தமிழனின் வெற்றியின் சந்தோசச்சத்தம்?
அழிந்தாலும் மடிந்தாலும் தமிழ் இனம்
விடியாமல் இருக்குமா தமிழ் ஈழம்?
சோடை போன தமிழன்
சோர்வின்றி எழுவான் ஓர்நாள்
சோகமே சொந்தமாகிப்போன தமிழனுக்கு
சொந்தமாக ஓர் நாடுண்டா?
சொந்தமாகக் கிடைக்கும் தமிழ்ஈழம்
சோர்வின்றி இருப்போம் அதுவரை!

## சரித்திரத்தை வரைந்திடு!

எது வந்த போதும்
துணிந்து நில் தோழா
பதுங்கி வாழாதே
ஏது மறியாதவனா யிருந்தால்
தரணியில் வாழலாகாதே
சாதுவாக யிருப்பது போல்
நடித்துக் காட்டாதே!
யாதுமறிந்து வாழ்தலேயிங்கு
சாதனையானதே-பொய்த்
தூது சொல்லி உன்னை நீ
உயர்த்த எண்ணாதே!
போதுமென்ற மனம் வளர்த்து
பொது வாழ்வில் ஈடுபடு!
தீது செய்யும் செயலகற்றி
நல்லறிஞர் வழி நாடிடு!
புதுவுலக மாகிவிட்ட காலமிது-நீ
புகையுலகில் இன்னுமா துயில்வது?
காதுகொடுத்துக் கேட்க இயலாக்
கதைகள் பல நடக்குது!
சூது, மது, மயக்கத்தை-நீ
விட்டொழித்து எழுந்திடு!
முதுமையினை அடைவதற்குள்
சரித்திரத்தைப் படைத்திடு!
முதுகுவளைந்து போன பின்னர்-உன்
வாழ்க்கையொரு பூஜ்ஜியம்-நீ
மூச்சு விட்டொழிந்து போன பின்னரங்கு
ஏதடா ராஜ்ஜியம்?

–கவிசுரபி சுப. சந்திரசேகரன்

# சோதனைச்சாவடி நடவடிக்கைகள் எளிமையாக்கப்பட வேண்டும்

**வவுனியாவில் நிலைமைகளை நேரில் பார்வையிட்ட நிலன் எம்.பி. கருத்து**

''சாதாரண மக்கள் எதிர் நோக்கும் மனித உரிமைப் பிரச்சினைகளும், மனிதாபிமானப் பிரச்சினைகளும், இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு காணப்படாதிருப்பதுடன் தொடர்பு கொண்டதாக இருக்கிறது. இடம் பெயர்ந்த மக்கள் தாம் எதிர் நோக்கும் சொல்லொணா கஷ்டங்களாலும் துன்பங்களினாலும் விரக்தியும் வேதனையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சிறுவர்கள் சீரழிந்து போனவர்களாக காணப்படுகிறார்கள். வயதானவர்களோ, தமது சோக அனுபவங்களைப் பற்றிக் கூறும்போது, துக்கம் தாங்காது வெளிப்படையாகவே விம்மியழுதார்கள். உள்ளூர் அதிகாரிகள் உதவிகள் பலவற்றைச் செய்த போதும் அவை போதுமானவையாக இல்லை.

இவ்வாறு கலாநிதி நிலன் திருச்செல்வம், பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். அவர் அங்கு வேப்பங்குளம், தாண்டிக்குளம், கல்விக்கல்லூரி அகதிமுகாம்களுக்குள் விஜயம் செய்த பின்பு தமது கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

### மீண்டும் மீண்டும் சோதனை ஏன்?

தாண்டிக்குளத்தில் சோதனைகளின் போது கஷ்டங்களைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கலாநிதி திருச்செல்வம் குறிப்பிட்டார்.

''இரண்டாவதாக, தாண்டிக்குளம் முகாமில், மக்கள் தொடர்புகளில் பெரும்பிரச்சினை உள்ளது. அங்கு பெரும்பாலானவர்கள் தமிழ் தெரியாதவர்களாக இருப்பதால், அடையாளத்தை உறுதிப்படுத்துவதில், அநாவசிய தாமதங்கள் ஏற்படுகின்றன.

மூன்றாவதாக மக்கள் பல்வேறு முகாம்களிலும் மீண்டும் மீண்டும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இந்த நடவடிக்கைகளும் எளிமைப்படுத்தப்பட வேண்டும்.

### போக்குவரத்து கஷ்டங்கள்

நான்காவதாக, நீர், சுகாதாரம், பொழுதுபோக்கு போன்ற வசதிகள் மிகவும் மோசமாக உள்ளன. பிள்ளைகளின் தேவைகள் விசேடமாகக் கவனிக்கப்படவேண்டியவையாகும். பெண்கள் மற்றும் சிறுமிகளின் பிரத்தியேக வசதிகள் போதுமானவையாக இல்லை.

ஐந்தாவதாக, யாழ்ப்பாணத்துக்கு பிரயாணம் செய்யவிரும்புவோர் போக்குவரத்துக் கஷ்டங்களுக்கும், தடைகளுக்கும், ஆளாகிவருகின்றனர். வவுனியாவில் தமது உறவினர்களுடன் சேர்ந்து அங்கு வாழ விரும்புகின்றவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுவதில்லை

அவர்களுக்கு ஒரு வார பாஸ்தான் வழங்கப்படுகிறது. இது விடயமாக திரு. சிவசிதம்பரம் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு வருகின்றார்.

ஆறாவதாக, விசேட தேவைகளுடன் இருப்பவர்கள் போதுமான அளவில் கவனிக்கப்படுவதில்லை. முகாமில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் பிரயாணம் செய்வதற்கு பாஸ் பெறுவதில் கஷ்டமடைகிறார்கள்.

இடம் பெயர்ந்த மக்கள் குறித்து காட்டப்பட்டு வரும் பாரபட்சங்கள் தொடர்பாக பரவலாக வரும் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது. மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு வந்து, அரசியல் தீர்வை முன்னெடுப்பது அவசியம். அதை தாமதமின்றி செய்யவேண்டும். அதே போன்று அரசியல் சட்ட சீர்திருத்த நடவடிக்கை எதிரணியின் ஆதரவைப் பெறக்கூடியதாக இருக்கவேண்டும்.

இவ்வாறு கலாநிதி நிலன் திருச்செல்வம் குறிப்பிட்டார். முன்னாள் எம்.பி. மாவை சேனாதிராஜாவும் பேசினார்.

# குருமாரின் கோரிக்கையை கொழும்பு அரசு ஏற்குமா?

**'வீரகேசரி' கேள்வி**

தொடரும் யுத்தத்தின் விளைவாக பெரும் அழிவுகள் ஏற்பட்டு வருகின்றன. யுத்தம் உக்கிரமடையும் நிலையில் சமாதானத்துக்கான வாய்ப்புக்களும் தூர விலகிச் செல்கின்றன. இதனால் உயிரிழப்புக்களும் சொத்தழிவுகளும் தினசரி அதிகரித்துச் செல்கின்றன. இந்நாட்டின் மூவின மக்களும் அனுபவிக்கும் வேதனைகள் தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்றது.

யுத்தம் முடிவடையாதா? சமாதானம் ஏற்படாதா?என்ற ஏக்கம் இந்நாட்டிலுள்ள அனைவரிடமும் காணப்படுகின்றது.

தென்னிலங்கை அரசியல் தலைவர்களிடையேயும், ஆயுதம் தாங்கிப் போராடும் இளைஞர்களிடையேயும் கருத்தொருமைப்பாடு ஏற்படாமல் இந்த யுத்தத்துக்கு நிரந்தரத் தீர்வு காண முடியாது. இதனைத்தான் அண்மையில் நடைபெற்ற கண்டி மறை மாவட்ட குருமார் மாநாட்டின் இறுதியில் விடுக்கப்பட்ட அறிக்கையும் வலியுறுத்தியிருக்கின்றது.

''நாடு இன்று மோசமான நெருக்கடி நிலையிலுள்ளது. இந்த அபாயகரமான நெருக்கடி நிலையிலிருந்து நாட்டைப் பாதுகாக்க அரசாங்கத் தலைவர்களும் மற்றும் ஆயுதம் தாங்கிய தீவிரவாத இளைஞர்களும் முன் வர வேண்டும். இந்த வகையில் இரு பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தமக்குள் இருக்கும் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமை உணர்வுடன் நிரந்தரமான சமாதானத் தீர்வு ஒன்று ஏற்பட துணிவுடன் செயற்படவேண்டும்'' என இம்மாநாடு அழைப்பு விடுத்திருக்கிறது.

காலத்துக்கேற்றவாறு துணிவுடன் விடுக்கப்பட்டுள்ள இந்த அழைப்பு வெறும் பத்திரிகை அறிக்கையாக மட்டும் போய்விடக்கூடாது.

அரசியல் சார்பற்ற, ஒரு மத அமைப்பு என்ற முறையில் மூன்று தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு இணக்கம் ஒன்றைக் காண்பதற்கான நடவடிக்கைகளை அவர்கள் முன் எடுக்க வேண்டும். அதன் மூலமே அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலும் வலுச்சேர்க்க முடியும்.

சமாதானமும் நல்லிணக்கமுமே மதங்களின் நோக்கம். இதற்கான போதனைகளையே மதங்களும் போதிக்கின்றன. இந்த வகையில் மதங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு அரசியல் சமூகப் பொறுப்பு இருக்கத்தான் செய்கின்றது அதனைச் செய்யத்தான் கண்டி மறைமாவட்ட ஆயர்கள் முற்பட்டிருப்பது தெரிகிறது.

ஆனால், இவ்விடயத்தில் அரசியல் கட்சிகளிடையே 'இணக்கம்' எந்தளவுக்கு அவசியமோ அதேபோல மதங்களிடையேயும் இணக்கம் ஒன்றைக் காண்பது அவசியம். முக்கியமாக பௌத்த மதத் தலைவர்களின் இணக்கம் அவசியம்.

இணக்கத்தை ஏற்படுத்த முனைந்துள்ள கண்டி மறை மாவட்ட குருமார் இவற்றையும் கவனத்திற்கொள்ளும் அதேவேளையில், ஏனைய மதத் தலைவர்களும் சமாதானத்துக்கான அவசியத்தை உணர்ந்து செயற்படுவது அவசியம்.

இவ்வாறு, 'வீரகேசரி' நாளேடு தன் ஆசிரியத் தலையங்கம் ஒன்றில் கூறியுள்ளது.

படிப்பகம்

# வடக்கிலுள்ள 27 ஆயிரம் பேர் தெற்கில் குடியேறி வாழ விருப்பம்

யாழ்குடா நாட்டிலிருந்து புறப்பட்டு நாட்டின் ஏனைய இடங்களுக்கு செல்ல விரும்பி சுமார் 37 ஆயிரம் பொதுமக்கள் இதுவரை விண்ணப்பம் செய்திருப்பதாக அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

மேற்படி 37 ஆயிரம் பேரில் சுமார் 10 ஆயிரம் பேர் மட்டுமே குடாநாட்டிலிருந்து வெளியே சென்று மீண்டும் சொந்த இடம் திரும்புவதற்காக விண்ணப்பித்திருக்கின்றனர்.

ஏனைய 27 ஆயிரம் பேரும் குடாநாட்டை விட்டு வெளியேறி கொழும்பு அல்லது நாட்டின், தென்பகுதியில் எங்காவது வாழ்வதற்கு விருப்பம் தெரிவித்து விண்ணப்பிந்திருக்கின்றனர்

## சிறைபட்ட வாழ்க்கை

வடபகுதி நிலைவரம் தொடர்பாக அண்மையில் கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடொன்றில் வைத்தே யாழ் அரச அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

'வடக்கில் உணவுக்குக் கஷ்டப்பட வேண்டியுள்ளது. தொழில் செய்யக் கூடிய வசதிகள் எதுவும் கிடையாது. நினைத்தபடி வெளியில் எங்கும் செல்ல முடியாதபடி சிறைப்பட்ட வாழ்க்கையாகவே உள்ளது. புனர்வாழ்வு உதவிகளையும் காண முடியவில்லை' என்பது போன்ற பலவித காரணங்களைக் குறப்பிட்டே குடாநாட்டிலிருந்து வேறிடம் செல்வதற்கு பெரும்பாலான மக்கள் விருப்பம் தெரிவித்திருப்பதாக அறியவருகிறது.

இது இவ்விதமிருக்க, கொழும்பிலோ அல்லது நாட்டின் தென்பகுதியில் எங்கேனுமோ 'கிளினிக்' செயல்முறைப் பயிற்சியை முடிக்கலாமென நம்பி வடக்கிலிருந்து வந்திருந்த யாழ் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 28 பேர் கடந்த திங்களன்று ஏமாற்றத்துடன் மீண்டும் யாழ் திரும்பினார்.

திருமலையிலிருந்து கப்பலில் இவர்கள் யாழ் சென்றனர்.

## ஏமாற்றமே மிஞ்சியது

இம்மாணவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இறுதிப் பரீட்சை எழுதியிருக்க வேண்டியவர்களாவர்.

யாழ்ப்பாணத்தில் 'கிளினிக்' பயிற்சியை முடிக்கக் கூடிய வசதிகள் இல்லாததாலேயே இவர்கள் கொழும்பு வந்திருந்தனர்.

மேற்படி 28 பேரும் தங்களது நிலைமை குறித்து கொழும்பு மேயர் கே. கணேசலிங்கம் ஊடாக கல்வி உயர் கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும் தெரியப்படுத்தியிருந்தனர்.

நீர் கொழும்பு வைத்திய சாலைக்கு இவர்கள் 'கிளினிக்' பயிற்சி முடிக்கச் சென்ற போது ஏமாற்றமே கிடைத்தது.

அதன் பின்னர் மாத்தறை பொது வைத்தியசாலைக்குச் சென்ற போது அவ்வைத்திய சாலையின் பணிப்பாளருக்கே வெளியிடங்களிலிருந்து மிரட்டல் வந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தகைய கஷ்டங்களை படுத்து யாழ் மருத்துவ மாணவர்கள். வேறு வழி எதுவுமின்றி 'கிளினிக்' பயிற்சியை முடிக்காமலேயே வடபகுதி திரும்பியுள்ளனர்.

# மடல் வழிச் செய்திகள்

யாழ்ப்பாணத்தில் இருந்து "ப," என்பவர் சென்னையில் உள்ள "இ" என்பவருக்கு எழுதிய கடிதம்.

யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் எல்லாம் தற்போது கொழும்பு செல்லவோ வெளிநாடு செல்லவோதான் முயற்சிக்கிறார்கள். அனேகமாக வயது வந்த பிள்ளைகளை வைத்திருப்பவர்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் படையினர் நன்றாக நடந்தார்கள். தற்போது சுற்றிவளைப்பு, ஆள் கடத்தல் என்று நடந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல கோண்டாவிலிலும், நாவற்குழியிலும் கற்பழிப்பு, கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் போகப் போக என்ன ஆகுமோ தெரியாது.

இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

இக் கடிதம் 25-10-96 எழுதப்பட்டது.

# புனர்வாழ்வு பணிகளை நேரில் பார்வையிட நெதர்லாந்து தூதுவர் யாழ். பயணம்

யாழ், குடாநாட்டில் அரசு மேற்கொண்டு வரும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை நேரில் பார்வையிட இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பெஸ்டியான் ஆர்கொர்னர் யாழ்ப்பாணம் பயணமானார். வடமாகாண புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் சோமபால குணதீரவும் அவருடன் சென்றுள்ளார்.

மின் சக்தி நீர்ப்பாசனத் துறை அமைச்சரும் பிரதி பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்த தலைமையில் நடைபெற்ற வடமாகாண புனரமைப்பு தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தை அடுத்தே சோமபால குணதீர யாழ் சென்றுள்ளார்.

யாழ் குடா நாட்டில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கென 25 ஆயிரம் தொன் விதை உருளைக்கிழங்கை வழங்க நெதர்லாந்து தூதுவர் முன் வந்துள்ளார். ஆயிரம் விவசாயிகளுக்கு கால் ஏக்கர் நிலத்தில் கிழங்கு பயிரிட விதை உருளைக்கிழங்கு வழங்கப்படும். இதற்கென ஆயிரம் விவசாயிகளை யாழ், அரசாங்க அதிபர் ஏற்கனவே தெரிவு செய்துள்ளார்.

## 30 ஆயிரம் புசல் விதை நெல்

இதே வேளை யாழ் குடா நாட்டில் மழை காலம் ஆரம்பமாக இருப்பதால் அங்கு ஏற்பட்டுள்ள கட்டிட இடிபாடுகள் மற்றும் கால்வாய் அடைப்புகள் என்பவற்றை நீக்கி நகரைச் சுத்தப்படுத்தவும் நெதர்லாந்து அரசு உதவ முன் வந்துள்ளது.

பெரும் போக நெற்செய்கைக்கென 30 ஆயிரம் புசல் விதை நெல்லை வழங்க உலக உணவு ஸ்தாபனம் முன்வந்துள்ளது. இந்த நிதி உதவியைக் கொண்டு அம்பாந்தோட்டையிலும்: பொலநறுவை மாவட்டத்தில் உள்ள பளுகஸ்தமன என்னுமிடத்திலும் விதைநெல்லைக் கொள்வனவு செய்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டிற்கு வாரமொன்றுக்கு 500 கோழிக்குஞ்சுகள் விமானம் மூலம் அனுப்பப்படுகிறது. இதுவரை சுமார் 15 ஆயிரம் ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

யாழ் நகரில் ஒரு கிலோ கோழி இறைச்சி 300 ரூபாவாகவும் முட்டையொன்று 10 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை செயற்கை முறையில் கோழிக்குஞ்சை பொரிக்கவைக்கும் இயந்திரமொன்றை வழங்க சுவிட்சர்லாந்து முன்வந்துள்ளது. இதன் பெறுமதி 70 லட்சம் ரூபாயாகும்.

மேலும் கோழிப்பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் முக்மாக கோழித்தீனி உற்பத்தி செய்ய முன்வருபவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




**யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம். பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. *இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது. வாசகர்களே குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.**

காசாம்பு பூமாலை
அ. வாசுதேவனூர்

கேள்வி: தமிழக-இந்திய அரசுகளின் மூலம் தான் இலங்கைத் தமிழர்களுக்கு விடியல் கிடைக்கும் என்ற நிலை இருந்தும், இங்குள்ள அரசியல்வாதிகள் இதிலும் அரசியல் ஆதாயம் உண்டா என்று பார்ப்பதைப் பற்றி என்ன சொல்வது?

பதில்: அழிவுக்கு ஆட்படும் ஈழத் தமிழினத்தில் உள்ளவர்களே அரசியல் ஆதாயக் கண் கொண்டு நிற்கையில், இவர்களை மட்டும் எப்படிக் குறைசொல்வது? மனிதாபிமானம் முன்னிலைப் படுத்தப்படாதவரை இத்தகைய போக்குகளை நீக்க முடியாது!

தந்தை செல்வா மாணவர் மன்றம்-இ.அ.முகாம்
சின்னப்பள்ளிக்குப்பம்

கே: அழிகின்ற இன்றைய ஈழத்திற்கு அகதி மாணவர்களாகிய நாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் என்ன?

ப: அகதி வாழ்க்கை என்பது ஒரு சன சமூகத்தின் அடிப்படைக் குறிக்கோளை மறக்கடித்து விடும். எதற்காக நாம் அகதிகளாக நேர்ந்தது என்பதையேகூட மறக்கடித்து அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையே அவர்களுக்கு எல்லாமாகிவிட நேர்ந்துவிடும். எனவே இலட்சியத்தில் மாறாத மனவுறுதியை முதலில் நம் மக்களிடம் குன்றாமல் காக்க வேண்டும்.

2) ஒரு ஈழத் தமிழன் குற்றச் செயலில் ஈடுபட்டாலும் அது முழு ஈழச் சமுதாயத்திற்குமே அவப் பெயரைத் தேடிக் கொடுக்குமென்பதால், மாணவர்களாகிய நீங்கள் முகாமைச் சேர்ந்த யாரும் குற்றச்செயலில் ஈடுபடாமல் கண்காணிக்க வேண்டும்.

3) சிரமதானங்கள்மூலம் முகாமைச் சுத்தமாகப் பராமரித்து சுற்றுச்சூழல் நலத்தைப் பாதுகாக்க வேண்டும்.

4) படிக்கின்ற மாணவர்கள் ஒவ்வொருவரும் தமக்குக் கீழ்நிலையில் படிப்பவர்களை மேல் நிலைக்குக் கொண்டு வரவும், படிக்கவே வாய்ப்பில்லாதவர்களுக்குப் படிக்க உதவி செய்தும் கற்கும் காலத்திலேயே கல்விச் சேவையைக் கூடவே செய்ய வேண்டும்.

5) இன்று அழிந்து கிடக்கும் ஈழத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய சிற்பிகள் மாணவர்களாகிய நீங்கள் தான் என்பதால், வீண் பொழுது போக்கு அம்சங்களில் பொழுதைக் கழிக்காமல், உங்கள் முழு ஈடுபாட்டையும் படிப்பிலேயே செலுத்த வேண்டும்.

ஆர். நயினார் முகமது-
கடையநல்லூர்.

*கே: சந்திரிகா அரசும், விடுதலைப் புலிகளும் போரை நிறுத்த வேண்டும் என்று, பாரதீய ஜனதா போன்ற கட்சிகள் சமநிலையில் வைத்து வற்புறுத்துவது சரிதானா?

ப: விடுதலைப் புலிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் சில கொரில்லாத் தாக்குதல்களில் சிங்களப் படைகளுக்கு இழப்பை உண்டாக்கியவுடன் வெற்றி வெற்றி என்று விண்ணதிர முழங்கும் வரை இத்தகைய வற்புறுத்தல்கள் இருக்கத்தான் செய்யும். ஏனெனில், அங்கு பேரழிவைச் சந்திப்பது ஈழத்தமிழினம் என்கிற உண்மை சிறுத்துப் போகிறது. தவிரவும், சிற்சில இடங்களில் சிங்களப் பொது மக்களுக்கு எதிராகவும் விடு

(12-ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



## வாசகர் நெஞ்சம்

அன்புள்ள ஆசிரியருக்கு,

''இப்போதைய அகதிகள் வருகைக்கு வேறு யாரும் காரணமல்ல. சிறீலங்கா அரசின் இராணுவக் கெடுபிடிகளே காரணம் என்பதை விளக்கி, ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத் தலைவர் சந்திரகாசன் விடுத்திருந்த அறிக்கையை முதல் பக்கத்தில் வெளியிட்டு, தெளியாத நெஞ்சங்களைத் தெளிய வைத்த 'ஈழ சுதந்திரனுக்கு' எனது பாராட்டுக்கள்!

கே. எஸ். அம்பிகாபதி, வாலாஜாபாத்.

ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு இப்போதைய சிறீலங்காப் படைகளின் தாக்குதல்களால் நேர்ந்த கொடுமை பற்றியும், அவர் தனது காயங்களுக்கான முதலுதவியையே தமிழ் நாட்டுக்கு அகதியாக வந்துதான்பெறமுடிந்தபரிதாபம்பற்றியும் முதல் பக்கப் பெட்டிச் செய்தி மூலம் அறிந்து துடித்துப் போனேன். இந்த நிலையிலும் கூட உலக நாடுகள் தலையிட்டு சிறீலங்காவின் வலுச் சண்டையை நிறுத்த முன் வராதது வருத்தத்தை அளிக்கிறது.

ஐ. ஆர். என். பிரதாபன், பரமத்தி.

''மனிதாபிமானத்திற்குத் தண்டனை வேண்டாம்'' என்ற தலைப்பில் அகதிகளுக்கு ஆதரவளிப்போர் தண்டிக்கப் படுவதை நிறுத்த வேண்டும் என்று மத்திய-மாநில அரசுகளுக்கு ஈழ சுதந்திரன்' விடுத்திருந்த வேண்டுகோளை எல்லாப் பத்திரிகைகளும் ஆதரித்து எழுத வேண்டும். எழுதுமா ?

மா. நாராயணன், வேலூர்-4.

'ஐ.கே. குஜ்ராலின் இலங்கை விஜயம்' என்று நீங்கள் ஆசிரியத் தலையங்கம் எழுதிய முகூர்த்தமோ என்னமோ. அவர் உடல் நலங்குன்றி, அந்த விஜயமே நடக்காமல் போய் விட்டது.

இரா. கோதண்டம், திருவில்லிப்புத்தூர்.

கார்த்திகை மாத ஈழ சுதந்திரனில் வெளியான கவிதைச் சரம் மிக்க மணமுடையதாக அமைந்திருந்தது. அத்தனை கவிதைகளும் ஈழத்தானின் வேதனைகளின் வெளிப்பாடுகளாக இருந்தன. நடந்தது, நடப்பது அத்தனையும் வெளிச்சமிட்டுக் காட்டப்பட்டுள்ளன. முனைவர் அரு. கோபாலனின் பாடல் நெஞ்சிலே குத்தியது. எமது சோகம் எல்லாம் தீரும் காலம் எப்போது? யாரறிவார்?

சோகவி. செல்வநாதன், இ. அ. முகாம்,
சின்னப்பள்ளிக் குப்பம்

ஈழ சுதந்திரனில் வெளி வருகின்ற செல்வி சித்திரா தேவசகாயத்தின் கவிதை, சிறுகதை போன்ற படைப்புகள் போற்றத் தக்கவை. அவை மேலும் வளர்ச்சியடைய எமது வாழ்த்துக்கள் !

தந்தை செல்வா மாணவர் மன்றம்,
சின்னப்பள்ளிக்குப்பம்.

''இலங்கை : தமிழர்-சிங்களர் ஒரு வரலாற்றுப் பின்னணி'' என்ற தலைப்பில் முனைவர் அரு. கோபாலன் எழுதி வந்த தொடர் அருமையாகவும், அறிய வேண்டிய பல செய்திகளை உள்ளடக்கியதாகவும் இருந்தது. ஆனால் கார்த்திகை இதழோடு அது முடிந்து விட்டதாகத் தெரிகிறது அதை மேலும் தொடர்ந்து எழுதி முழுமையான ஒரு வரலாற்று நூலாக வெளியிட்டால் பயனுடையதாக இருக்கும்.

பேராசிரியர் சு. முத்துச்சாமி, சென்னை-87.

யாழிலிருந்து வந்த கண்ணீர்க் கடிதங்களாக ஒரு கல்வியாளரின் கொடிய அனுபவங்களைக் கொடுத்திருந்தீர்கள். ஏற்கனவே ஆங்கில நாளேட்டில் வந்தவைதான் என்றாலும் 'கோரா' அற்புதமாகத் தமிழாக்கியிருந்தார்.

மு. விவேகானந்தன், சென்னை-11.

''வீம்புச் சண்டை போட்டு உயிர்களை வீணாக்குகிறார் சந்திரிகா குமாரதுங்க'' என்ற தலைப்பில் சாலையார் எழுதியிருந்தது, இந்தியாவில் ஈழத் தமிழருக்காகப் பேச யாருமே இல்லையோ என்று ஏங்கும் இதயங்களுக்கு இதமளிப்பதாக இருந்தது.

சே. நாகநாதன், வந்தவாசி.

''தமிழக சஞ்சிகைகளில் ஈழச் செய்தி ஒரு பார்வை'' என்கிற தலைப்பில் இரத்தினராசசிங்கம் தொகுத்தளிப்பவை பயனுடையவை என்றாலும் 'ஜூனியர் விகடன்' துக்ளக்' என்று பாப்புலர் பத்திரிகைகளில் வந்தவற்றையே எழுதுகிறார். உண்மையில் குடத்திலிட்ட விளக்குப் போலிருக்கும் சிற்றிதழ்களே ஈழத் தமிழர்களைப் பற்றி அதிகமாக எழுதுகின்றன. ஈழத்தமிழர் என்றில்லை; பாதிக்கப்படும் மக்கள் யாரானாலும் துடித்துக் குரல் கொடுப்பவை சிற்றிதழ்கள் தான். அவைதான் நாட்டு மக்களின் உள்ளக்கிடக்கைகளைப் பிரதிபலிப்பவையுமாகும். அவற்றை விட்டு விட்டு வியாபாரப் பத்திரிகைகளில் வேண்டா விருப்புடன் எங்கோ ஒரு மூலையில் வெளியிடுபவற்றை எடுத்துப் போடுவது ஓர வஞ்சனையாகும்.

ம. செ. வில்பிரட்,
ஆசிரியர் : 'காகம்' மாத இதழ்
வெளிச்சந்தை, குமரி மாவட்டம்.

ஈழ சுதந்திரனில் வரும் மடல்வழிச் செய்திகளை ஆவலுடன் படித்து வருகிறோம். இன்னும் அதிகமாக இடம் பெறச் செய்ய வேண்டுகிறோம்.

கவிஞர் திருவள்ளூர் பச்சையப்பன்,
கவிஞர் அருமை நாதன், திருவள்ளூர்.

அண்மையில் அகதியாகத் தமிழகம் வந்தவர்களின் சோகக் கதைகளை இரத்தினராசசிங்கம் நன்றாகத் தொகுத்துத் தந்திருந்தார். படிக்கப் படிக்க இரத்தம் கொதித்தது. ஆனால் கொதிக்க வேண்டியவர்களுக்குக் கொதிக்கவில்லையே ! என்ன செய்வது !

கு. கணேசலிங்கம், காங்கேயம்.

# ஈழத் தமிழர்கள் எம் சகோதரர்கள் அவர்கள் நலம்பெற நாடுகிறோம்

## சென்னைப் பேராயர் அசரியா ஆசியுரை

சென்னைப் பேராயர் மாசிலாமணி அசரியா அவர்களை ஈழத் தலைவர் சந்திரகாசன் அவர்கள் தலைமையில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தினர் சந்தித்தபோதே பேராயர் அவ்விதம் ஆசியுரைத்தார்.

ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகத் தலைவரும், ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக நிறுவனருமான சா.செ. சந்திரகாசன் அவர்கள் தலைமையில் கழகத்தைச் சார்ந்த சாம் கோயில் பிள்ளை செல்வி சூரியகுமாரி, இரா. மாணிக்க வாசகர், சாமுவேல். க. இரத்தினராசசிங்கம் மற்றும் கழக இசைக்குழுவினர் 18-11-96 அன்று, சென்னைக் கதீட்ரல் சாலையில் உள்ள பேராயர் அலுவலகத்தில் அவரைச் சென்று சந்தித்தனர்.

முதலாவதாக கழக இசைக் குழுவினர் பேராயரைப் பற்றிப் புனைந்த பாடலை இசைத்தனர். பின்னர் கழகத்தின் சார்பில் பேராயருக்கு சால்வையும், மாலைகளும் அணிவிக்கப்பட்டன. பதிலுக்கு பேராயரும் திரு.சந்திரகாசனுக்கு சால்வை அளித்துக் கௌரவித்தார்.

அத்துடன்தாம்எழுதிய''புது வாழ்வுப் பாடல்களும் கவிதைகளும்'' என்ற நூலையும், சென்னைப் பேராயம் வெளியிடும் ''நமது புதுவாழ்வு'' என்ற சஞ்சிகையையும் தமது அன்பின் அடையாளமாக வழங்கினார். அப்போது அங்கு சமுகமளித்திருந்த பங்குத் தந்தைகளுக்கும் கழகப் பிரமுகர்களை அறிமுகப் படுத்திவைத்தார்.

திரு.சந்திரகாசன்ஈழச்சிக்கல் பற்றியும், இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள ஈழத் தமிழ் அகதிகள் பிரச்சினைகள்பற்றியும், அவர்களுக்குத் தொண்டாற்ற அமைக்கப்பட்ட அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைப்புக் குழுச் செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள தொய்வு நிலை குறித்தும் பேராயருக்கு விளக்கமாக எடுத்துரைத்தார்.

உரியவகையில்சென்னைப் பேராயத்தின் ஒத்துழைப்புக்கு உறுதியளித்த பேராயர் மாசிலாமணி அடிகளார் அகதிகள் நலனுக்காகத் தனிப் பிரார்த்தனை நடத்தி ஆசியுரையும் வழங்கினார்.

முற்பகல் 11-மணியளவில் சென்ற ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தினர், பேராயரின் அன்பாசியைப் பெற்று பிற்பகல் 1-30 மணியளவில் அலுவலகம் திரும்பினார்கள்:

இச்சந்திப்பின் போது பாட்டாளி மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் தமிழ் எழில் மலை அவர்களும், முனைவர் அரு.கோபாலனும் உடன் இருந்தனர்.

பயத்தை விட்டு, பஞ்சத்தை வென்றிட பேராயர் மா. அசரியா அருளிய கவிதை வருமாறு:

கஞ்சிக்கில்லை வீட்டில் என்று
கிஞ்சித்தேனும் அஞ்சாதே
பஞ்சம் என்று நாட்டில் வந்தால்
அஞ்சி அஞ்சித் துஞ்சாதே

நெஞ்சில் அச்சம் இல்லையென்றால்
பஞ்சம் தீர்க்கும் படிக்கல்லாம்
நெஞ்சின் திட்பம் வல்லமையாலே
பஞ்சம் பயந்து பறந்திடுமே

கொஞ்சும் குழந்தை அழுகுரல் கேட்டு
மஞ்சம் விட்டு எழுந்திடுவாய்
நஞ்சை வயலில் புஞ்சைக் காட்டில்
துஞ்சா துழைத்துப் பொருள்தேடு

கொஞ்சம் கொஞ்சம் என்றே குடிக்கும்
நஞ்சை இன்றே நிறுத்திவிடு
மிஞ்சும் பணத்தை முதலாய் வைத்து
மஞ்சள் மனையாள் தொழில் செய்வாள்

அஞ்சும் படைத்த ஆண்டவர் அவரை
நெஞ்சில் வைத்து வெளிசென்று
பிஞ்சும் கனியும் பறித்து வந்து
பஞ்சம் கடந்து பண்புடன் வாழ்!

பேராயர் மாசிலாமணி அசரியா அடிகளார் பற்றி ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகக் கலைக் குழுவினர் இசைத்தளித்த பாடல் வருமாறு:

வீழ்ந்து கிடப்போர் வாழ்ந்து உயர்ந்திட
வீதி சமைத்திடும் தூயரே
வேதனை மாற்ற ஏதிலியர் நாம்
வேண்டி வந்தோம் உமை ஆயரே
பேராயரே - மாந்த - நேயரே (வீழ்ந்து)

சங்கை மிகுந்திட்ட செங்கை உதித்திட்ட
சிங்கமெனத் திகழ் வேந்தரே
உங்கள் மொழியான சங்கத்தமிழ் பேசும்
எங்கள் இருள்நீக்கும் ஏந்தலே
மனச் சாந்தியே - தருவீர் - ஏந்தியே (வீழ்ந்து)

தவித்து இனமக்கள் விழித்துச் செழித்திட
உழைத்துக் கரைசேர்க்கும் தோணியே
அழித்து எமைலங்கா முடித்து விடும்முன்னே
அடைக்கலம் கோரினோம் ஞானியே
வான் ஏணியே - ஏற்றிடு - வாய்நீயே (வீழ்ந்து)

திக்குத் திசையின்றிச் சிக்கித் தவிக்கிறோம்
பக்கத் துணையின்றி நாங்களே
டெக்ராஸ் அமைப்பினால் பக்குவமாகவே
தக்க வழிகாட்டித் தாங்களேன்
இங்கு நீங்களே - துணையாய் - வாங்களேன் (வீழ்ந்து)

தொண்டு அமைப்புகள் ஒன்றுபட்டுச் செய்யும்
தொண்டு துலங்கிட வேணுமே
அன்று நட்டு வைத்த கன்று வளர்ந்திட
இன்றும் தண்ணீர்விட வேணுமே
கண்பாருமே - கவலை - தீருமே (வீழ்ந்து)

உசர எழும் திங்கள் அசரியா எனும் எங்கள்
நிஜமே உங்கள் புகழ் வாழ்கவே
அசதிதனைப் போக்கி வசதிதனை ஆக்கி
அகதி மக்கள் நலம் சூழ்கவே
என்றும் வாழ்கவே - இறையருள் . நீள்கவே (வீழ்ந்து)

## திருநெல்வேலியில் ஷெல் தாக்குதல் இருவர் பலி

யாழ் குடா நாட்டில் திருநெல்வேலி பகுதியில் பாற்பண்ணை,ஒட்டியாலடி ஆகிய பகுதிகள் மீது கடுமையான ஷெல் வீச்சு தாக்குதல்கள் நடைபெற்றன.

சுன்னாகம் முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் ஒட்டியாலடி அகதி முகாம் மீது விழுந்ததில் இரு குடிமக்கள் கொல்லப்பட்டதுடன் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் தெல்லிப்பழை, சங்கானை, யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com

(முனைவர் அரு. கோபாலனின் ஈழத்தைப் பற்றிய தொடர் கட்டுரை ஒன்று சென்ற இதழ் வரை இடம் பெற்ற தால், 'ஒரு குறளை உணர்வோம்' என்ற அவருடைய இத் தொடர் நிறுத்தப் பெற்றிருந்தது. மீண்டும் இவ்விதழி லிருந்து தொடர்கிறது. -ஆசிரியர்)

# ஒரு குறளை உணர்வோம்

## 36. எது தவம்?

-'அருகோ'-

'தவம்' என்கிற பெயரிலேயே திருக்குறளில் ஒரு அதி காரம் உள்ளதும், அவ்வதிகாரம் 'அறத்துப்பாலில்' 'துறவற வியலில்' வைக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

இத் 'தவம்' எனும் அதிகாரத்திற்குப் பொருள் கூற வந்த பரிமேலழகர் ''அஃதாவது மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயில் நிலை நிற்றலும், மாரியினும் பனியி னும் நீர் நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற் கொண்டு, அவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர்களை ஓம்புதல். புலால் மறுத்து உயிர்கள் மேல் அருள் முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின் இது புலால் மறுத்தலின் பின் வைக்கப்பட்டது'' என்றும்-

மணக்குடவர் : ''தவமாவது, ஊணும் உறக்கமும் குறைத்தலும், வெயிலும் பனியும் தாங்கலும், தேவர் வழிபாடு முதலாயினவும் மேற் கொண்டு முயறல்'' என்றும்-

பரிதியார் : ''தவமாவது, தவஞ் செய்யும் நெறியைச் சொல்லும்'' என்றும் கூறியுள்ளனர்.

ஆனால், திருவள்ளுவரோ எது தவம் என்பதை ஒரு குறட்பாவிலேயே மிகத் தெளிவாகக் கூறி விடுகிறார்.

''உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு''

—திருக்குறள் : 261

பரிமேலழகர் : தவத்திற்கு உரு-தவத்தின் வடிவு; உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே-உண்டி சுருக்குதல் முதலியவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், தாம் பிற உயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையுமாகிய அவ்வளவிற்று.

மற்றுள்ளன எல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின் 'அற்றே' எனத் தேற்றேகாரங் கொடுத்தார். 'தவத்திற்கு உரு அற்று' என்பது 'யானையது கோடு கூரியது' என்ப தனை 'யானைக்குக் கோடு கூரியது' என்றாற் போல ஆறாவதன் பொருட்கண் நான்காவது வந்த மயக்கம்.

இதனால், தவத்தது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்குடவர் : தமக்கு உற்ற நோயைப் பொறுத்த லும், பிற உயிர்க்கு நோய் செய்யாமையும் ஆகிய அத் தன்மையே தவத்திற்கு வடிவாம்.

பரிதியார் : பிறர் நோவுக்கு இரங்கலும், தாம் பிறர்க்கு வருத்தஞ் செய்யாமையும் ஆகிய இவையே தவத்திற்கு வடிவு.

காளிங்கர் : தமக்கு வந்துற்ற நோயைத் தாம் பொறுத் தலும், தாம் பிற உயிர்க்கு இடுக்கண் செய்யாமையும் அத் தன்மைத்தே ஒருவரொருவர் செய்யும் தவத்திற்கு வடிவாவது.

'உறுகண்' என்பது இடுக்கண். நோன்றல் என்பது பொறுத்தல்.

டாக்டர் மு.வ. : தனக்கு உற்ற துன்பத்தைப் பொறுத் தலும், மற்ற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய அவ்வளவே தவத்திற்கு வடிவமாகும்.

தவம் செய்வது என்பது குடும்பத்தைத் துறந்து, காட்டுக் குந் போய், தனிமையில் இருந்து, பட்டினி கிடந்து, உடம்பை வருத்திச் செய்யக் கூடிய ஒரு கடுமையான விரத மாகும் என்ற கருத்தை அடித்துத் தகர்ப்பது இந்தக் குறளா கும். அப்படியெல்லாம் ஒன்றும் செய்யத் தேவையில்லை. உடலாலும், உள்ளத்தாலும், பொருளாலும் தமக்கு வரும் துன்பங்களைப் பொருட்படுத்தாமலும், அப்படியேபிற உயிர் களுக்குத் துன்பம் செய்யாமலும் இருப்பதும் தான் தவம் என்று அறிவு கொளுத்துகிறார் திருவள்ளுவர்.

'உயிர்க்கு உறுகண் செய்யாமை' என்ற சொற்றொடர் மூலம் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பது மட்டுமின்றித் தன்னுயிர்க்குத் தானே துன்பம் தருவதையும் தவிர்க்க வேண்டும்; அது தான் தவம் என்கிறார் வள்ளுவர். அதாவது தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள் ளும் அதே வேளை தானே தனக்குத் துன்பத்தை இழைத் துக் கொள்ளவும் கூடாது என்கிறார்.

இதன் மூலம் 'மெழுகுவர்த்தித் தத்துவம்' (தன்னை உருக்கிக் கொண்டு பிறர்க்கு ஒளி தருவது) 'ஊது வத்தித் தத்துவம்' (தன்னை எரித்துக் கொண்டு பிறர்க்கு மணம் தருவது) போன்றவற்றை வள்ளுவர் தவச் செயலாகக் கருத வில்லை என்பது தெளிவாகிறது.

ஒளி, கதிரவனைப் போல அதன் எழுச்சியுடன் எழுச்சி தருகின்ற இயல்பானதாயிருக்க வேண்டும்.

மணம், பூஞ்செடி போல அது மலர்கின்ற போதே மணமூட்டி மகிழ்ச்சி தருகின்ற பண்புடையதாக இருக்க வேண்டும்.

ஆக்கத்தையன்றி, இரு பக்கமும் அழிவைச் செய்யாத இந்தப் பண்புதான் தவமாகும் என்று, வள்ளுவரையன்றி வேறு யாரால் சொல்ல முடியும்?

# குயுக்தியார் பதில்கள்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் மேற்கொள் ளும் சிறிய நடவடிக்கைகளை யும் பெரிது படுத்திக் காட்டி, சந்திரிகா அரசு விடுதலைப் புலிகளையும் இனக் கொலை யில் தங்களின் போட்டியாளர் களாய்ச் சித்தரிக்கின்றன.

இதனால், உண்மையில் சிறீலங்காவின் அரச பயங்கர வாதம்தான் விடுதலைப் புலி களையும் சில நேரங்களில் அத்து மீறச் செய்கின்றன; பொது மக்களுக்கு அழிவை ஏற்படுத்துகிறது என்றாலும், இரு தரப்பையும் ஒன்றுபோல் பாவிக்கச் செய்து விடுகிறது. எப்படியோ போரை நிறுத்தும் படி அவர்கள் வற்புறுத்துவது வரவேற்கத்தக்கதே!

எம்.வி. அக்பர்
காரைக்கால்

கே: மீண்டும் ''அங்கு விடுதலைப்புலி ஊடுருவல், இங்கு விடுதலைப்புலி கைது'' என்றெல்லாம் புலிப்பயமுறுத் தல் பூதாகாரமாகக் காட்டப் படுகிறதே?

ப: புலிப்பயம் காட்டியே தி.மு.க ஆட்சியை ஒருமுறை கவிழ்த்து வெற்றி கண்ட அதன் எதிர்ப்புச் சக்திகள், மீண்டும் அந்தப் பாதையில் காயை நகர்த்த முற்பட்டிருப் பதையே இது எடுத்துக்காட்டு கிறது. ஆனால், இது இந்தி யாவின் ஆரோக்கியமான அர சியலுக்கு ஏற்புடையதல்ல. அதேவேளை புலி ஆதரவுச் சக்திகள் தி.மு.க ஆளும் சந் தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, புலிகளுக்குப் புகழ் கூட்டுவதாக நினைத்துக் கொண்டு, ஈழத்தமிழர்களுக் கான ஆதரவை ஊனப்படுத்து வதும் அழகல்ல.

நா.ப. வீரணன்
புதுப்பட்டி

கே: இனப் பிரச்சினை யில் இதுவரை மூன்றாவது தரப்பு-வெளிநாட்டு மத்தியஸ் தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து வந்த சந்திரிகா, இப் போது ஏற்க முன் வந்திருப்ப தற்கு என்ன காரணம்?

ப: இந்திய அரசியலில், குறிப்பாகத் தமிழக அரசிய லில் ஏற்பட்ட மாற்றம்தான்!

வி.ஆர். ரவிகுமார்
சிறுமுகை

கே: பாலஸ்தீனியர் பிரச் சினையில் பரிவு காட்டிய அமெரிக்கா, ஈழத்தமிழர் பிரச் சினையில் மட்டும் இடக்குச் செய்வது ஏன்?

ப: அங்கே அரபு-இஸ் லாமிய நாடுகளின் அதரவு நிலை. இங்கே இந்தியா கூட ஏறெடுத்துப் பார்க்க மறுக்கும் இழிநிலை. இந்தியா ஆதரிக்க முன்வந்தால் வங்கதேசத்தில் போல ஈழத்தையும் அமெ ரிக்கா ஏற்கும் என்பதில் சந் தேகம் வேண்டாம். எல்லாம் ஆதாய அணுகுமுறைதான்!

வா.அ. மாரிமுத்து
கள்ளக்குறிச்சி

கே: சந்திரிகா வராமல், ஐக்கிய தேசியக்கட்சி ஆட் சியே சிறீலங்காவில் இப்போ தும் தொடர்ந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

ப: தமிழ்மக்கள் இவ் வளவு தூரம் ஏமாந்திருக்க மாட்டார்கள். யாழ்ப்பாண மேனும் இராணுவ வசமாகா மல் எஞ்சி இருந்திருக்கும்.

எது சரி எது பிழை என்றுபார்க்க இதுவல்ல நேரம்

# அழியும் மக்களைக் காப்பாற்ற ஆதரவுக் கரமே தேவை

## முதல்வருக்கு ஒரு அகதியின் கண்ணீர் கடிதம்

எதுசரி, எது பிழை என்று பார்க்காமல், இலங்கையில் அழிந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களைக் காப்பாற்ற சர்வதேச சமுதாயத்தைத் தூண்டும் முறையில் முதல் குரல் கொடுக்க முன்வரவேண் டும் என்று, தமிழக முத லமைச்சருக்கு ஒரு ஈழ அகதி கண்ணீர்க் கடிதம் எழுதியுள் ளார்.

அறந்தாங்கி அழியாநிலை இலங்கை அகதிகள் முகாமில் குடியிருக்கும் க.முத்துக்குமார சாமி இதுபற்றித் தமிழக முதல் வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் கூறியிருப்ப தாவது:

ஐயா,

இன்று இலங்கையின் கிளிநொச்சி மாவட்டத்தில் சிக்கித் தவிக்கும் இரண்டு லட்சம் அப்பாவித் தமிழர் களின் சார்பில் இம்மடலை அனுப்புகிறேன். உண்ண உணவும் குடிக்கத் தண்ணீ ரும், அடிப்படை சுகாதார மருத்துவ வசதி எதுவுமற்ற நிலையில் நித்தம் நித்தம் இறந்து கொண்டிருக்கிறானே இந்தத் தமிழன்—இவனைப் பற்றி ஏன் இந்த உலக சமு தாயம் சிந்திக்கவில்லை?

ஐரோப்பிய சமுதாயம், நேட்டோ, சீட்டோ அமைப் பெல்லாம் ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் தான். எமக்கு யார் துணை? உற்ற துணையும், உறுதுணையும் தமிழ்நாடுதான். ஏன் நீங்கள் மௌனமாயிருக்கிறீர்கள்?

### அழிவது தமிழினமே

புலிகளும் - அரசபடையு மோதட்டும். ஆனால் இ யில் சிக்கி அழிந்து கொண் ருக்கும் இந்தத் தமிழனை யா காப்பாற்றுவது? இன்றை நிலையில் உங்களுக்கு தமிழ நாட்டு அரசியல் விவகாரங்க கைநிறைய உண்டு என்பன உணர்கிறேன். எனினும் தமி நாடு உடனடியாகக் குர கொடுக்கவேண்டும் என்ப எமது தாழ்மையான வேண் கோள்.

எதுசரி-எதுபிழை, கடந் கால நிகழ்வுகள் ஆகியவற்ற எடைபோட இது சமயமல்ல சர்வதேச் சமுதாயம் கண் விழித்துப் பார்க்க உங்கள் குரல் முதலில் ஒலிக்க வேண் டும். எமது வேண்டுகோளை இன்றே சட்டசபையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலம் தமிழ்நாட்டின் உணர்வுகளைத் தூண்டுங்கள்.

இவ்வாறு அந்த வேண்டு கோளில் கேட்டுக்கொள்ள பட்டுள்ளது.

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN, No 14, Salt Colony, Ist Street, IIIrd Floor, Egmore, Madras-600008.
Printed at Kuralnery Achagam, Madras-94.

சனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை.

படிப்பகம்